# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

ஜோஸ்பிட்டா மேரி, விர்ஜின், எதெல்பெர்கா, வில்சன் மேரி, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி- திருச்சி, மிரியம், ஜெயசேகரி, அமிர்த ராணி- திண்டுக்கல், மேரி மௌரிஸ்- தஞ்சாவூர், லோரா மேரி - தூத்துக்குடி, அருள் மேரி, லூக்காஸ் மேரி, அனன்சியா மேரி, பிலோமினாள், டோம்னா மேரி, டோனட்டெல்லா அனஸ்த்தாசியாள், ஜார்லத் புஷ்பா, டோன்போஸ்கோ மேரி, மேரி ஆக்னஸ்- கும்பகோணம், சலேத் மேரி - திருப்பூர், ரூபெல்லா மேரி, வித்யா மேரி, பிரேமா - திருநெல்வேலி , செலின், சின்னராணி - விழுப்புரம், கலிஸ்ட்டா மேரி, லில்லி இஸபெல்லா மேரி- மதுரை, ரூபி மேரி - கரூர், அருள் சீலி - முட்டம், ஜெனிபர்-ஹரிஹார்

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், லீமா தெரஸ், ஞானசேகரன் - திருச்சி; செல்வி, இருதய விஜிலா, லீலா முருகன், மார்கிரேட் பெல்சியா- திண்டுக்கல் மேரி - இளையரசனேந்தல்; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். பிரேமா மோரிஸ், ரீஜின் பபிலா - சென்னை.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. சலேத் மேரி FSAJ- திருப்பூர்
திருமதி. ரீஜின் பபிலா - சென்னை

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**







# துறவறம்


## பதிப்பாசிரியர் பக்கம்

ற.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச


ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியின் பக்தர்களே கார்மல் அன்னையின் திருவிழாவைக் கொண்டாட நாம் காத்திருக்கின்றோம். விண்ணேற்பு அடைந்த அன்னை தன் இருப்பிடத்தை விண்ணகத்தில் மட்டும் நிலை நிறுத்திக் கொள்ளவில்லை தொடர்ந்து மண்ணக மக்களுக்கும் காட்சிக் கொடுத்துக் கொண்டேதான் இருக்கிறார். அவர் தொடர்ந்து கொடுக்கும் காட்சியானது அவர் எந்த அளவுக்கு மண்ணக மக்கள்மீது அன்பு வைத்திருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. நம் அன்னையின் காட்சியினைக் கண்டவர்கள் வெறும் சாதாரண மக்கள் மட்டும் கிடையாது துறவிகளும்கூடதான் அன்னையின் காட்சியினைக் கண்டார்கள்.

அருள்நிறைந்தவரான நம்முடைய அன்னை கார்மல் மலையில் தியானம் மேற்கொண்டிருந்த துறவிகளுக்கு காட்சிக் கொடுத்தார். அவ்வாறு துறவிகளுக்கு காட்சிக் கொடுக்கும்போது ஒரு வேண்டுதலை அவர்கள் முன்னால் வைத்தார். அது என்னவென்றால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கின்ற ஆன்மாக்களின் மீட்புக்காக ஜெபிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கின்றார்.

இந்த காட்சியானது ஏறக்குறைய 12 ஆம் நூற்றாண்டில் நடந்த ஒன்றாக இருக்கிறது. இன்று நாம் 21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| மரியா நம்பிக்கையின் முன்மாதிரியும் | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| கார்மல் அன்னை திருவிழா | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மரியா - கடவுளின் கடிதம் | - 25 |
| பொதுநிலையினரின் பார்வையில் மரியா | - 28 |
| மகிழ்ந்து வாழ்வோம் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

கொண்டிருக்கின்றோம். அன்னை மரியாள் தான் காட்சி கொடுப்பதை நிறுத்திவிட்டாரா என்றால் இல்லை. இன்றும் நம் அன்னை தொடர்ந்து காட்சிக் கொடுத்து கொண்டுதான் இருக்கிறார். இன்றும் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கின்ற ஆன்மாக்களின் மீட்புக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொண்டுதான் இருக்கிறார். காலங்கள் மாறியிருக்கலாம், ஏன் காட்சிகள்கூட மாறியிருக்கலாம் ஆனால் அன்னை நம்மீது கொண்டிருக்கும் அன்பு மட்டும் மாறாமல் இருக்கிறது.

பல இடங்களில் காட்சிக் கொடுத்திருக்கக்கூடிய அன்னை சிறப்பாக கார்மல் மலையில் காட்சிக் கொடுத்திருக்கிறார். மலை மனிதக் கலாச்சாரத்தோடு நெருங்கிய ஒன்று. ஐந்துவகை நிலங்களில் மலையும் மலை சார்ந்த குறிஞ்சி என்று அழைக்கப்படும். இந்த மலையானது கடவுளை சந்திக்கும் இடமாகவும் இருக்கிறது. மனிதர்களும் கடவுளும் சங்கமிக்கும் இடமாகவும் இந்த மலையானது இருக்கிறது. கடவுள் மனிதர்களை சந்திக்கும் இடத்தில் அன்னை மரியாள் துறவிகளை சந்திக்கிறார். அன்னை ஒரு சாதாரணப் பெண்மணிதானே! அப்படியிருக்க எப்படி அவர் கடவுள் தரிசனம் கொடுக்கும் இடத்தில் தரிசனம் கொடுக்கலாம்? கொடுக்கலாம் நம் அன்னை சாதாரணப் பெண்மணியாக இருந்தாலும் அவள் இறைவனின் தாய் அந்த உரிமையில் மலையில் தரிசனம் கொடுக்கலாம்.

இவ்வாறு இந்த துறவிகளுக்கு காட்சிக் கொடுத்த நம் அன்னை ஒரு துறவியா? ஆம் துறவிதான்.

**அடையாளத்தை துறந்தவர்**

நாசரேத்தில் பிறந்து ஒரு சாதாரணப் பெண்மணியாக வளர வேண்டியவர் தன்னுடைய அடையாளத்தை இழந்து ஒரு அசாதரண வாழக்கை வாழ்ந்தார். தான் சார்ந்து இருக்கக்கூடிய சமுதாயத்திற்கு பயந்து, தான் சார்ந்து இருக்கக்கூடிய குடும்பத்திற்கு பயந்து, தான் சார்ந்து இருக்கக்கூடிய இனத்திற்கு பயந்து தன்னடைய அடையாளத்தை இழந்து வாழ்ந்தவர்.

**ஆசைகளை துறந்தவர்**

ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று புத்தர் சொல்வார். ஆனால் அன்னை துன்பத்தை விலக்க ஆசையைத் துறந்தவர் அல்ல மாறாக துன்பங்களைத் தாங்கி கொள்ள ஆசையைத் துறந்தவர். வாழ்க்கை முழுவதும் துன்பம்தான். பெத்லகேம் பயணமாக இருக்கட்டும், எகிப்து பயணமாக இருக்கட்டும், இயேசுவைத் தேடிச் சென்ற எருசலேம் பயணமாக இருக்கட்டும் எல்லாமே துன்பப் பயணங்கள்தான். துன்பங்கள் நிறைந்திருந்தாலும் ஒருபோதும் தன்னுடைய ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள அன்னை விரும்பவில்லை.

துறவிகளுக் காட்சிக் கொடுத்த நம் அன்னை நம்மையும் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கின்ற ஆன்மக்களின் மீட்புக்காக ஜெபிக்க அழைப்பு விடுக்கிறார்.

**துறவறம் இறைவனின் அருள்வரம்**
**வாழ்வோம் வரத்தைப் பெறுவோம்.**

**எழிலரசி – கண்ணகிநகர்**

எனக்கு திருமணமாகி 14 வருடங்கள் கடந்தும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தேன். கடந்த 5 வருட காலமாக மாதாவைப் பற்றி அறிந்து மனமுருக மன்றாடினேன். அன்னையின் அருளால் அழகான பெண் குழந்தை கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜெயசீலன் – செம்மஞ்சேரி**

என் மனைவிக்கு குழந்தை வரம் இல்லாமல் இருந்தது. மாதாவிடம் மன்றாடினேன் மழலை வரம் கிடைத்தது. மேலும் எனக்கு நிறைய பிரச்சனைகள், மாதாவிடம் ஜெபம் செய்தேன். என் மன கஷ்டங்கள் எல்லாவற்றையும் நீக்கி என்னை மகிழ்வித்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**செசில் – கன்னியாகுமரி**

எனக்கு 2014-ம் ஆண்டு திருமணம் நடந்தது. 8 ஆண்டுகள் கழித்து முதல் பெண் குழந்தை பிறந்தது. என் வாழ்க்கையில் நிறைய கஷ்டங்கள் அனுபவித்தேன். மகளுக்கு பெயர் தெரியாத வியாதியால் கஷ்டப்பட்டோம். பிறகு அது என்ன வியாதி என்று கண்டுபிடித்தோம். 2 வருடங்கள் கழித்து ஜீவமாதாவிடம் வந்தோம் எங்கள் கவலைகளை அன்னையிடம் விண்ணப்பித்தோம் மேலும் பாவசங்கீர்த்தனம் செய்தோம். இப்பொழுது என் மகள் நலமாக உள்ளார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சாந்த குமாரி**

எனக்கு திருமணமாகி 5 வருடங்கள் கடந்து குழந்தை பாக்கியம் பெற்றேன். என் சீமந்தம் முடிந்து மாதாவிடம் எனக்கு சுகப்பிரசவம் வேண்டி ஜெபித்தோம் அதேபோல் சுகப்பிரசவம் ஆனது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஷாலினி**

2021-ல் எனக்கு மாதாவின் அருளால் பெண்குழந்தை கிடைத்தது. மீண்டும் ஒரு குழந்தை கிடைத்தது. இரட்டிப்பான மகிழ்ச்சியைக் கொடுத்த அன்னைக்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

ஜூன் மாதம் 3 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**லூர்து மேரி – வேளச்சேரி**

என் கணவருக்கு ஏப்ரல் 30 –ம் தேதி மூக்கில் அறுவை சிகிச்சை நடந்தது. மூக்கில் ரத்தக் கசிவு ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு சென்று காண்பித்தோம். நான் ஜீவ மாதாவிடம் அவர் மூக்கிலிருந்து ஒரு ரத்த துளியும் பார்க்கக் கூடாது என்று ஜெபம் செய்தேன். மாதாவின் அருளால் நலம் பெற்றார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜோதி – பெரம்பூர்**

என் மகனுக்காக குழந்தை வரம் வேண்டி மாதாவிடம் மன்றாடினேன். அருமையான குழந்தையை கொடுத்திருக்கின்றார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜெசிந்தா – பெங்களூர்**

என் மகளுக்கு திருமணத்தடை இருந்தது. நான் மாதாவிடம் அழுது புலம்பி மன்றாடினேன். மாதாவின் அருளால் திருமணத்தடை நீங்கி 2 மாதத்திற்கு முன்னர்தான் திருமணம் நடந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சாலமன்**

எனக்கு திருமணமாகி 3 வருடங்கள் ஆகியும் குழந்தை செல்வம் இல்லை மாதாவின் அருளால் அழகான குழந்தை கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஓர் வயதான பெரியவர் பலருக்கு கடன் கொடுத்திருந்தார். பணம் திருப்பி கொடுக்காத மூவரை அழைத்து, 'உங்களால் நான் கொடுத்த பணத்தை திருப்பி கொடுக்க முடியவில்லை எனக்கும் வயதாகி கொண்டிருக்கிறது அடுத்த பிறவியில் நீங்கள் எந்த முறையில் எனது கடனை அடைப்பீர்கள் என்று கூறினால் இப்போது உங்களிடம் பணம் கேட்க மாட்டேன்' என்று கூறினார். முதல் நபர் வந்து, "நான் அடுத்த பிறவியில் உங்கள் வீட்டு குதிரையாக பிறந்து நீங்கள் விரும்பும் இடங்களுக்கு எல்லாம் உங்களைத் தாங்கிச் செல்வேன்" என்றார். பெரும் மகிழ்ச்சியடைந்த பெரியவர் அவரது கடன் பத்திரங்களை கிழித்து எறிந்து விட்டார். இரண்டாவது நபர், "நான் உங்கள் வீட்டு மாடாக பிறக்க விரும்புகிறேன். உங்கள் வயலில் உழைத்து உங்கள் கடனை அடைப்பேன்" என்றார். பெரியவர் மகிழ்ச்சியோடு அவரது கடனையும் மன்னித்து விட்டார். மூன்றாவது நபர், "நான் அடுத்த பிறவியில் உங்களுடைய தாயாக பிறக்க விரும்புகிறேன்" என்றார். பெரியவர் சற்று குழம்பி போனார். உடனே மூன்றாவது நபர், "குதிரையாக, மாடாக பிறந்து உங்களுக்கு பணியாற்றுவதைவிட, உங்களுக்கு அம்மாவாக இருந்து உங்களை பெற்றெடுப்பேன், குழந்தையாக இருக்கும்போது தேவையான அனைத்தையும் கொடுப்பேன், ஒரு குறையும் வராமல் உங்களை வளர்த்தெடுப்பேன்" என்று கூறினார். பெரியவர் அவரை கட்டி அணைத்து கண்ணீர் சிந்தினார். அன்னை மரியாள் நம் அனைவரின் தாயாக இருக்கின்றார். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பல காட்சிகள் வாயிலாக தன்னுடைய உடனிருப்பை நிரூபிக்கிறார். ஜூலை மாதம் 16-ம் நாள் புனித கார்மல் அன்னையின் விழாவினைக் கொண்டாடுகின்றோம். கார்மல் என்ற சொல்லுக்கு எபிரேய மொழியில் 'தோட்டம்' என்பது பொருள். சிலுவைப் போர் நடந்த காலத்தில் சில துறவிகள் பாதுகாப்பாக இருக்க இந்த மலைக்கு சென்றனர், பிற்காலத்தில் இவர்கள் கார்மல் மலை துறவிகள் என்று அழைக்கப்பட்டனர். 1251-ம் ஆண்டு ஜூலை 16-ம் நாள் அப்போதைய சபையின் தலைவர் சைமன் ஸ்டோக் என்பவருக்கு அன்னை காட்சிக் கொடுத்தார். மேலும் கருநிறத்தில் இருந்த உத்தரியம் கொடுத்து இதை அணிந்து கொள் இதை அணிந்து கொள்வோரை இடர்களிலிருந்தும் நரக தண்டனையிலிருந்தும் காப்பாற்றி அமைதி தருவேன் என்று சொல்லி மறைந்தார். நாம் உத்தரியம் அணிந்து கொள்வதன் வாயிலாக அன்னையை பெருமைப்படுத்துகிறோம், அன்னையின் கட்டளைப்படி நடக்கிறோம், அன்னையின் அரவணைப்பில் வாழ்கிறோம். கார்மல் அன்னையின் வாயிலாக இடர்களையும் நரக தண்டனையையும் வென்று வாழும் வரம் வேண்டுவோம்.

# மரியா நம்பிக்கையின் முன்மாதிரியும் ஆசிரியையும்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றும் கிறிஸ்தவ வாழ்வின் மிக முக்கிய பண்புகளாகக் கருதப்படுகின்றன. நம்பிக்கை கடவுளின் கொடை. "நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பது கிடைக்கும் என்னும் உறுதி; கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை" என்று புனித பவுலடியார் கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் நம்பிக்கைக்கு முன்மாதிரிகளாக பல முதுபெரும் தந்தையர்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள் இருந்துள்ளனர். புதிய ஏற்பாட்டில் நமது அன்னை மரியா ஒப்பற்ற ஒரு முன் உதாரணமாகத் திகழ்கின்றார். இவர்கள் அனைவரும் இறைவனின் கட்டளைகளையும், நியமங்களையும், முறைமைகளையும் நுணுக்கமாக நிறைவேற்றியவர்கள். இறைவனோடு நெருங்கிய உறவில் வாழ்ந்தவர்கள். இவர்களின் நம்பிக்கை வாழ்வு, பல பரிமாணங்களை உள்ளடக்கியது. சிறப்பாக இக்கட்டுரையில் மரியின் வாழ்வு எவ்வாறு நம்பிக்கையின் பயணமாக அமைந்திருந்தது என்பதை பார்ப்போம்.

**பழைய ஏற்பாட்டில்**

இவ்வுலகில் முதல் பாவம் தோன்றிய அந்த கணத்திலேயே மனிதன் தனது அருள் நிலையை இழக்கின்றான் ; இறைவனின் மீட்பின் வரலாறு உதயமாகிறது. இதை நிறைவேற்ற கதாபாத்திரங்களையும் தேர்ந்தெடுக்கின்றார் ; அழைக்கின்றார்; அவர்களுக்கு நம்பிக்கை என்னும் கொடையை அளிக்கின்றார். அக்கொடையை சிறப்பாக வாழ்வதற்கு அவர்களோடு உறைகின்றார் ; உரையாடுகின்றார் ; உடன் பயணிக்கின்றார். கடினமான பாதையிலும், உயர் மலையிலும், பள்ளத்தாக்கிலும் பயணம் செய்ய பணிக்கின்றார். இவ்வாறு அவர்களின் நம்பிக்கையை பரிசோதனைக்கு உட்படுத்தி, திடப்படுத்தி அன்பையும், அருளையும் அவர்கள் மீது நிறைவாய்ப் பொழிந்து மீட்பின் வரலாற்றில் தமது பங்கினை சிறப்பாக ஆற்றிவந்ததை பழைய ஏற்பாடு படம் பிடித்துக் காட்டுகிறது. "உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தாரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிற்கும் நாட்டிற்கு செல்" ஆண்டவர் ஆபிரகாமுக்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார். "ஆபிரகாம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார். "இதோ நெருப்பும் விறகுக் கட்டைகளும் இருக்கின்றன எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே? என்று வினவ தன் ஒரே அன்பு மகனுக்கு ஆபிரகாம் கூறிய பதில் நம்பிக்கையின் உச்சக்கட்டத்திற்கு நம்மை எடுத்துச் செல்கின்றது. கடவுளே பார்த்துக் கொள்வார் மகனே என்று அவர் கூறிய மொழி இன்றும் நம்மிலே ஒலித்தால் நாமும் நம்பிக்கையின் மக்களாக இறைவன் ஒருவரையே பற்றாக பற்றிக் கொள்வோம்.

விடுதலைப்பயண நூலில் மோசேயின் அழைப்பு, எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து தன் சொந்த மக்களை விடுவித்து நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தின் வழியே நடத்திச் செல்லும்போது அனுபவித்த இன்னல்கள்





8-ம் பக்க தொடர்ச்சி.................

**மரியா நம்பிக்கையின் ஆசிரியை**

மரியாவைப் போல எந்த படைப்பும் மூவொரு இறைவனின் மறைபொருளில் இணைந்திருக்கமுடியாது. ஆயினும் இதைப் பற்றிய அறிவைப் பெற நமக்கு மரியா உதவியாக இருக்கிறார். எனவே நாமும் ஓரளவுக்கு மூவொரு இறைவனில் இணைந்தவர்களாய் நமது கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து கொண்டு வருகிறோம்.

மரியாவைப்போன்று நாமும் முழுவதுமாக இறைவனால் ஆட்கொள்ளப்பட நமக்கு அவர் கற்றுத்தருகிறார். நமது துன்ப வேளைகளில், இக்கட்டான சூழ்நிலைகளில் இறைவன் மீது அசையா நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க நம்மைத் தூண்டுகிறார். இறைத்திருவுளத்தைக் கண்டு கொள்ள அன்னையின் நம்பிக்கை வாழ்வு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இதோ உமது அடிமை; உமது திருவுளப்படியே எனக்கு ஆகட்டும் என்று நமது அன்னையைப் போன்று அனைத்து நிகழ்வுகளிலும் உள்ளத்தில் உரக்கக் கூற பழகினால் நாமும் பேறுபெற்றோராவோம்.

நமது அன்னை ஒருபோதும் தயங்கியதில்லை. தடம் மாறியது இல்லை. நம்பிக்கைப் பயணமும் பாதையும் மிகத் தெளிவாக இருந்தன. கல்வாரிக்காட்சிகளைப் போன்ற அனுபவம் இந்த உலகில் எந்த தாய்க்கும் கிடைக்காது. அந்த சூழலிலும் சிலுவை அடியில் துணிவுடன், பணிவுடன் உயிர்விடும் மகனை உற்று நோக்கியவாறு நின்றார். இந்தத்தாயையே உங்களுடைய தாய், அவரைப்போன்று நம்பிக்கையில் வளருங்கள் என்று அன்புச்சீடர் தூய யோவான் வழியாக நமக்கு நம்பிக்கையின் அன்னையாகவும், ஆசிரியையாகவும் விட்டுச்சென்றார் இயேசு. எனவே நம்பிக்கையில் தளர்ச்சி ஏற்படும்போது மரியாவிடம் செல்வோம். அவருடைய் தாய்மைப்பண்பு கிறிஸ்துவின் மறை உடலாம் திருச்சபை முழுவதும் பரவிகிடக்கிறது.

மரியாவைப் போன்று நமது வாழ்வின் நிகழ்வுகள் அனைத்தையும் நம் உள்ளத்தில் வைத்து சிந்திக்க அவர் நம்மை அழைக்கின்றார். வாழ்வின் பிரகாசமான சூழ்நிலையையும், இருள் கவ்வும் துயர வேளைகளையும் சம மனநிலையுடன் பார்க்க மரியா நமது நம்பிக்கையை தனது நம்பிக்கை வாழ்வினால் நமக்குக் கற்றுத்தருகிறார். அனைத்து செயல்பாடுகளிலும் இறைக்கரம் வழிநடத்த நம்மை அனுமதிப்போம்.

இறைவார்த்தையை தியான மனநிலையில் வாசிப்போம். அவ்வார்த்தை வழி இறைவனோடு உரையாடுவோம். அவரின் குரலைக் கேட்போம். அவர் காட்டும் பாதையில் நடப்போம். இறைவார்த்தையின்படி நடப்போர், அயலார் மீதும் அக்கறையோடு இருப்பார்கள். இதைத்தான் கானாவூரில் மரியா செய்தார். அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்று கூறி புதுமையான புதிய இரசம், வாழ்விக்கும் மகிழ்வான இரசம் இயேசுவே என உலகிற்கு உணர்த்தியவர் மரியா. அவரும் நம்மை நோக்கி இறைவார்த்தை வழி இயேசு சொல்வதை செய்வோம் என்று கூறுகிறார். அவ்வாறு செய்து வார்த்தைக்கும், வழிபாட்டிற்கும், வாழ்வுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்துவோம்.

நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டுதலை எழுப்புவோம். நமது நோய்கள், இழப்புக்கள், சந்திக்கும் இறப்புகள் வேளைகளில் துணிவுடன் செபிப்போம். நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது நம்பிக்கையுடன் கேட்பதை எல்லாம் பெற்றுக் கொள்வீர்கள் என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டு செபிப்போம். செயல்பாடுகள், தியாகம், பணிவு ஆகிய பண்புகள் நம்பிக்கையோடு இணையும் போது நாமும் அன்னை மரியாவைப் போன்று நம்பிக்கையின் மாதிரிகளாக விளங்குவோம்.

# மகிழ்ந்து வாழ்வோம்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

வைகறைப் பொழுதின் வானவர் இசையாய்
ஆலயமணி ஒலி தருவது மகிழ்ச்சி
புள்ளினம் பாடும் பூபாள இசையை
புலரும் காலை தருவது மகிழ்ச்சி
வானும் நிலவும் வளமிகு நிலமும்
ஆழ்கடல் அலையும் தருவது மகிழ்ச்சி
வண்ணவண்ண மலரும் மலர்களின் மணமும்
தீங்கனிச் சுவையும் தருவது மகிழ்ச்சி
மழலைச் சிரிப்பும் மனங்கவர் இசையும்
கவினுறு கவியும் தருவது மகிழ்ச்சி
குருதியைப் பிழிந்து வியர்வையை வடிக்கும்
கோடையில் தென்றல் தருவது மகிழ்ச்சி
இறைவன் வரைவினில் எத்துணை எழில்கள்!
அத்துணை வரைவும் தருவது மகிழ்ச்சி
இத்துணை மகிழ்வும் இறைந்துமே கிடக்க
மனிதனின் மனத்துள் கவலைகள் ஏனோ?
வாழ்வினில் மோதிடும் துன்பங்கள் கோடி – அதில்
தானாய் வந்துறும் துன்பங்கள் பாதி – செய்
தீமையின் விளைவால் வருபவை மீதி
துன்பத்தின் வேரினை அறிந்ததைத் தவிர்த்தால்
வாழ்வே மகிழ்வின் நிறைவினால் திளைக்கும்.
'தீதும் நன்றும் பிறர்தர வாரா'
'இடுக்கண் வருங்கால் நகுக'
'வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'
'கடமையைச் செய்து களிப்புடன் வாழ்'
-இனி-
விவிலியம் சொல்லும் அருள்மொழி காண்போம்.
"உள்ள மகிழ்ச்சியே மனிதரை வாழ வைக்கிறது.
அகமகிழ்வே மானிடரின் வாழ்நாளை
வளரச் செய்கிறது" (சீராக் 30:22)
"உன் உள்ளத்திற்கு உவகையூட்டு
உன்னையே தேற்றிக்கொள். வருத்தத்தை
உன்னிடமிருந்து தொலைவில் விரட்டிவிடு.
வருத்தம் பலரை அழிக்கிறது" (சீராக் 30:23)
"எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்" (1 தெச 6:16)
"எனதான்மா இறைவனை ஏற்றியே மகிழ்கின்றது"
என மகிழ்ந்து பாடிய விண்ணேற்புத் தாயே!
உனது சுவடுகளில் தொடர்ந்து கால்பதித்து
நாங்களும் மகிழ்ந்து பாட, மகிழ்ந்து வாழ
உனது மகிழ்வை எமக்கும் தா.





அனைத்தும் நமக்கும் கூறுவதென்ன? மோசே இறைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையும், இறைவன் அவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையுமாகும். பார்வோனின் முன் தான் பேச தகுதியற்றவன் என்பதைச்சொல்லி தப்பிக்க முனைந்த மோசேக்கு ஆண்டவர் கூறிய பதில் : "இப்போதே போ! நானே உன் நடுவில் இருப்பேன் ; நீ பேச வேண்டியதை உனக்கு கற்பிப்பேன்" என்பதாகும். இறைத்திட்டத்தில் நமக்கென வகுக்கப்பட்டிருக்கும் பங்கினை நாம் மட்டுமே நிறைவேற்ற முடியும். மோசேயிடம் கூறிய நம்பிக்கையூட்டும் வார்த்தைகள் நமக்கும் கொடுக்கப்படுகின்றன. "எனது பிரசன்னம் உன்னோடு செல்லும், நானும் உனக்கு இறைப்பாறுதல் அளிப்பேன்".

தாவீது மன்னரும் ஆண்டவர் மீது அளவற்ற நம்பிக்கை கொண்டிருந்தார். ஆண்டவர் அவரோடு இருந்தார் என பிறர் உணர்ந்தனர். சவுலின் பணியாளர்களே, ஆண்டவர் தாவீது எனும் இளைஞரோடு இருப்பதை சவுலுக்கு தெரியப்படுத்தினர். எதிரிகளை எதிர்த்து போரிடுமுன் தாவீது ஆண்டவரிடம் ஆலோசனை கேட்கின்றார். அவரும் புறப்பட்டு போ. பெலிஸ்தியரை உன்னிடம் ஒப்புவிப்பேன் என்றார். தாவீது பாவம் செய்தபோது இறைவன் நாத்தான் வழியாக அவரைக் கண்டிக்கின்றார். அப்போது தாவீது மனம் உருகிய திருப்பாடல் 51 - யை நாமும் அதே மனநிலையில் பாடுகிறோம். "கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே; கடவுளே! நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை". தூயவராம் கடவுளின் இரக்கத்தின் மீது ஒரு பாவி கொண்டிருக்க வேண்டிய நம்பிக்கையை இத்திருப்பாடல் எடுத்துக் காட்டுகிறது. "ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை" என்ற தொடக்கவரிகளைக் கொண்ட திருப்பாடல் 23, ஆயர்களுக்கெல்லாம் மேலான ஆயராம் இறைவன் மீது தாவீது கொண்டிருந்த நம்பிக்கையைப் பறைசாற்றுகிறது. "உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம் உன் அருள் நலமும் பேரன்பும் எனைப் புடைசூழ்ந்து வரும் ; நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்". இது தாவீதின் நம்பிக்கை அனுபவம்.

## மரியா, நம்பிக்கையின் முழுமையான மாதிரி

"பலமுறை, பலவகைகளில் முக்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாட்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார் (எபி 1 : 1). இவ்வாறு பழைய ஏற்பாட்டில் தொடங்கிய இறைவெளிப்பாடு புதிய ஏற்பாட்டில் நிறைவு அடைகின்றது. இதையே பவுல் அடியார் "காலம் நிறைவேறிய போது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்" (கலா 4 : 5) பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்து ஒரு மீட்பர் பிறப்பார் என்ற எதிர்பார்ப்பையொட்டி முன்மொழிந்த இறைவாக்குகளெல்லாம் மரியாவில் நிறைவேறியது. எவ்வாறு ஆபிரகாம் தன் சொந்த இனத்தையும், நாட்டையும் விட்டுவிட்டு புறப்பட்டதுபோல, மரியா, இறைவனில் நம்பிக்கை கொண்டு வானதூதரின் மங்கள வார்த்தைக்குக் முற்றிலுமாக தன்னை அர்ப்பணித்தார். இவ்வாறு கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வோர் யாவருக்கும் மாதிரியாகவும் தாயாகவும் திகழ்கிறார். கன்னிமரியா நம்பிக்கையின் முழுமையான மாதிரியானவர். கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்று நம்பினார். எனவே வார்த்தை மனுவாகி நம்மிடையே குடிகொள்ளும் மாபெரும் மீட்பின் நிகழ்வின் காரண கர்த்தாவானார்.

மரியா, எலிசபெத்தைச் சந்தித்த நிகழ்வில், "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்ற வாழ்த்தைப் பெறுகின்றார். இறை வார்த்தையில் மரியா கொண்டிருந்த நம்பிக்கை அவரது உறவினர் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது. அவ்வேளையில் அவர் முழங்கிய

விடுதலைக் கீதமும் கூட நம்பிக்கையையே சுட்டிக்காட்டுகிறது. இறைவனுக்கு அஞ்சி நடப்போர், தாழ்நிலையில் இருப்போர். வறுமை, பசி, பிணியில் வாடுவோர் அனைவருக்கும் விடுதலை வழங்க மெசியா பிறக்கப்போகின்றார். ஏனெனில் இவர்கள் இறைவனில் நம்பிக்கை கொண்டு அவரையே சார்ந்து வாழ்ந்தவர்கள். இவர்களின் ஏக்கமான இறையாட்சி மலர இருப்பதை அகக்காட்சியாகக் கண்டு களிக்கும் மரியாவின் நம்பிக்கை நமக்கு எழுச்சியூட்டுகிறது அவரது உறுதிப்பாடு இயேசுவின் விடுதலை செயல்பாடுகளில் மிளிர்ந்தது.

இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டு ஆகட்டும் என்று பணிந்த மரியாவின் வாழ்வின் பல கட்டங்களில் அந்நம்பிக்கை வளர்ந்து, உயர்ந்து நின்றது. கன்னிமை குன்றாமலேயே தன் மகன் இயேசுவைப் பெற்றெடுத்தார். இறைமகனுக்குப் பிறப்பதற்கு இடமில்லையே என்று அங்கலாய்க்கவில்லை. சூசையின் கனவு மீதும் நம்பிக்கை கொண்டு துணிவுடன் பாலன் இயேசுவை தூக்கிக் கொண்டு எகிப்துக்கு நடு இரவில் பயணமானார். இயேசு தனது பொது வாழ்வில் சந்தித்த சவால்கள், அவமானங்கள், புறக்கணிப்பு மத்தியிலும் அவரின் சீடத்தியாகப் பின் சென்றார். மீட்பின் வரலாற்றில் தனது வியாகுலங்கள் வழியாகவும் இயேசுவின் பாடுகளில் பங்கேற்கும் மனநிலையில் அவரது நம்பிக்கை வெளிப்பட்டது. ஏனெனில் சிமியோனின் இறைவாக்கைக் கண்முன் கொண்டிருந்தார். "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும்" என்ற கூற்றின் உட்பொருள் தெளிவாகிக் கொண்டிருப்பதை கண்டுணர்ந்தார். இவரின் நம்பிக்கையினாலேயே இயேசுவின் உயிர்ப்பின் ஆற்றலிலும் பங்குபெற்று தான் பெற்ற அனுபவத்தை பன்னிரெண்டு திருத்தூதர்களோடும் பகிர்ந்து பெந்தகோஸ்தே பெருவிழாவில் அவர்கள் தூய ஆவியாரை பெற்றுக்கொள்ள உறுதுணையாக செபத்தில் ஈடுபட்டிருந்தார்.

அனைத்து நிகழ்வுகளிலும் மரியாவின் நம்பிக்கைப் பார்வை இழையோடிச் சென்றது. எல்லாவற்றையும் தனது உள்ளத்தில் பொக்கிஷமாக பொதிந்து வைத்திருந்தார். இறைவார்த்தையின் மீது கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை நிறைந்த மரியாவின் வாழ்வை, அவரது அன்பு மகன் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு வந்தார். எனவேதான் கூட்டத்திலிருந்த பெண் ஒருவர், "உம்மை கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம்தாய் பேறுபெற்றவர்" என்று குரலெழுப்பிக் கூறிய போது "இறைவாவார்த்தையைக் கேட்டு அதை கடைபிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்" எனும் பெருமையை தனது அன்புத்தாய்க்கு ஏற்றிப்போற்றினார்.

அன்னை மரியா இத்தகைய நம்பிக்கையை ஒரு சாதாரணப் பெண்ணாக ஒரு குக்கிராமத்தில் வாழ்ந்து காட்டினார். அனைவர் முன்னிலையிலும் ஒரு தச்சரின் மனைவியாகவே விளங்கினார். ஆனால் தூய ஆவியாரின் ஒப்பற்ற வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டவராய் தூய தமத்துருத்துவத்தின் அன்பின் ஒன்றிப்பில் திளைத்து தனது ஆன்மீக அழகில் செழித்து வளர்ந்து வந்தார். உலகைப் படைத்த இறைவனின் தாய் அவரின் அடிமையாக வாழ்வது என்பது மரியாவின் வாழ்வின் கலையாகவும், பயணமாகவும் அமைந்திருந்தது. இதற்குக் காரணம் அவர் இறைவனோடு கொண்டிருந்த நீங்காத ஒன்றிப்பு. தன்னை முழுவதும் இறைவனின் குரலுக்கும் வழிநடத்துதலுக்கும் முழுமையாக அர்ப்பணித்துவிட்டு அமைதியாக வாழ்ந்து வந்தார். அதே சமயத்தில் கடவுள் தம் மக்களோடு செய்யும் பயணத்தில் வெளிப்படுத்தும் அடையாளங்களைக் கண்டு கொண்டார். கடவுளின் வாக்குறுதிகள் நிறைவேறும் காலம் கனிந்து வரும் அந்த மீட்பின் திட்டத்தில் தனது அழகான நம்பிக்கை வாழ்வினால் இதமாக இழையோடிச் சென்றார்.

தொடர்ச்சி 31-ம் பக்கம்.................





ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 15 ஆம் நாளை "அன்னை மரியாளின் விண்ணேற்பு நாள்" என்று கொண்டாடுகின்றோம் பொதுவாக இந்திய கலாச்சாரத்தில் பெண் தெய்வங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதால் இந்த விழாவானது நம் நாட்டில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. வான தூதர்களால் வாழ்த்து பெற்ற அன்னை மரியாள் தூதர்கள் புடை சூழ விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார். விண்ணக தந்தையின் திருவுலத்தை தன் பிறப்பு முதல் நிறைவேற்றியதன் பலனாக தன் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பின்னர் விண்ணகஅரசியாக முடி சூட்டப்படும் பாக்கியம் பெற்றார்.

அன்னை மரியாளின் பிறந்தநாள் விழாவினை செப்டம்பர் 8 - ஆம் தேதி கொண்டாடுகின்றோம் இதற்கு ஒரு கதை உண்டு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் எட்டாம் தேதி ஒரு துறவி இனிமையான இசையை கேட்டு மகிழ்ந்து ஆச்சரியப்படுவாராம். ஆனால், அந்த இசை எங்கிருந்து வருகிறது என்று தெரியாமல் இருந்தார். எனவே பல ஆண்டுகள் கடவுளிடம் அதை வெளிப்படுத்தும் படி வேண்டினாராம் அப்போது ஒரு நாள் அதே செப்டம்பர் 8 - ஆம் தேதி அவருக்கு அதைப்பற்றி வெளிப்படுத்தப்பட்டதாக கூறுகின்றார். அதாவது அந்த நாளில் அன்னைக்கு விண்ணகத்தில் வான தூதர்கள் பிறந்தநாள் எடுத்து அன்னையை புகழ்ந்து பாடுகின்ற செய்தியைத்தான் அவர் கேட்டதாக சொல்லுகிறார். எனவே நாமும் நமது அன்னைக்கு இந்த உலகத்தில் விழா எடுக்க வேண்டும் என்று திருத்தந்தையிடம் சொன்னார். அப்போது திருத்தந்தையாக இருந்த 14 - ஆம் ஆசிர்வாதப்பர் உலக திருச்சபையை "அன்னையின் பிறப்பு விழா" செப்டம்பர் 8 - ஆம் தேதி கொண்டாட அறிவித்தார்.

வியாகுல் அன்னை என்பது கன்னி மரியாளுக்கு அளிக்கப்படும் பெயர்களில் ஒன்றாகும். "வியாகுல் அன்னையின் விழா" சிமியோனின் இறைவாக்கின் அடிப்படையில் கொண்டாடப்படுகிறது. பனிரெண்டாம் ஆசிர்வாதப்பர் குருத்து ஞாயிறுக்கு முன் வரும் வெள்ளிக்கிழமையை வியாகுல் அன்னையின் விழாவாக கொண்டாடப்பணித்தார். இந்த விழாவானது பிறகு செப்டம்பர் மாதம் 15 - ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகின்றது

1942 ஆம் ஆண்டு திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதரால் ஆகஸ்ட் மாதம் 22 - ஆம் தேதி "திரு இருதய அமல அன்னை விழா" உரோமை வழிபாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது

அமலோற்பவம் என்பது மரியாள் பெற்ற பாக்கியம் என்று சொல்வதை விட தனது மகன் இயேசுவின் பொருட்டு கடவுள் மரியாளுக்கு கொடுத்த பெயர் என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். இயேசு கிறிஸ்துவின் தாயான மரியாள் அவரது தாயின் வயிற்றில் பாவம் இன்றி கருவானதை கொண்டாடும் விழாவே இது. மரியா பிறப்பு நிலை பாவமின்றி பிறந்தார் என்னும் கருத்தை மையப்படுத்தும் விழாவாகவும் இது அமைந்துள்ளது. அன்னை மரியாவின் அமலோப் பெருவிழா தொடக்கத்தில் பல்வேறு பெயர்களில் கொண்டாடப்பட்டு வந்தது 1854 - ஆம் ஆண்டு டிசம்பர் 8 - ஆம் தேதியில் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் மரியாவின் "அமலோற்பவ பெருவிழா" என்ற பெயரில் கொண்டாட அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு செய்தார்

ஆண்டுதோறும் டிசம்பர் 18 - ஆம் தேதி அன்னையின் பிள்ளை பெயரை நினைவு கூறும் வகையில் "பிள்ளை பெற காத்திருக்கும் மரியா" என கொண்டாடப்படுகிறது

அதுபோலவே பெந்தகோஸ்தே திருவிழாவுக்கு அடுத்த மூன்றாம் ஞாயிறு "தூய இதயம் கொண்ட மரியாவின் விழா" கொண்டாடப்படுகிறது

இதுபோன்று நமது மரியன்னை போற்றும் விதமாக பல திருவிழாக்களை கொண்டாடி நாம் பக்தி முயற்சி ஈடுபட்டு அன்னையின் புகழையும், மகிமையையும் உலகறிய அனைவரும் அறியச் செய்வோம். மரியே வாழ்க, மாதாவுக்கே புகழ்.



# பொதுநிலையினரின் பார்வையில் மரியா (5)

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

## அன்னை மரியாளின் திருவிழாக்கள்

நாம் அன்னை மரியாளை மகிமைப்படுத்த அவருக்காக பல விழாக்களைக் கொண்டாடுகிறோம் குறிப்பாக பொது நிலையினருக்கு அன்னை மரியாளின் விழாவென்றால் அவரின் பிறந்த நாளும், அவரின் விண்ணேற்பு நாள் மட்டுமே நம் நினைவில் இருக்கும். ஆனால், அதை விடுத்து மரியன்னையை போற்றும் விதமாக பல விழாக்கள் நம் திருச்சபையிலே கொண்டாடப்படுகின்றது, இதைக் குறித்து நம் பொது நிலையினர் பலருக்கு இதுவரை அறியப்படாமல் இருப்பது விந்தையே.

''மணப்பெண்ணாக மரியா'' ஜனவரி 23 - ஆம் நாள் திருமணமான மரியாளை போற்றும் விதமாக இந்நாளை கொண்டாடுகின்றோம். அதேபோன்று ஏப்ரல் 26 - ஆம் நாள் அன்னை மரியாவை ''நல்ல ஆலோசனையின் தாய்'' என்று கொண்டாடுகின்றோம். கானாவூர் திருமண வீட்டில் ரசம் தீர்ந்தவுடன் நல்ல ஆலோசனை வழங்க தொடங்கிய மாதா நமது வாழ்விலே இன்னல்கள் தொடர்ந்து வரும் போது நமக்கு இன்றளவும் பல நல்ல ஆலோசனைகளை வழங்கி ஆலோசனை கூறுபவர்களின் சிகரமாக அன்னை மரியாளை காணலாம்.

''சதா சகாய மாதா'' இம் மாதாவின் திருவிழா ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 27 - ஆம் நாள் கொண்டாடப்படுகிறது இப்பெயரை திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் மரியாவை அழைக்க பயன்படுத்தினார். இப்பெயர் கிபி 15 - ஆம் நூற்றாண்டை சேர்ந்த பிரான்சிசிய கலையில் அமைந்த ஒரு மரியாவின் திருவுருவத்தோடு தொடர்புடையதாகும். இத்திரு ஓவியத்தின் தனித்தன்மைகளில் ஒன்று அதில் உள்ள அன்னை மரியா நம்மை நேரடியாக பார்ப்பதும், குழந்தையேசு தாம் அனுபவிக்க போகிற துன்பத்தை முன்னறிந்து அச்சம் கொள்வதும், அதனால் அவர் தம் காலில் இருந்து காலனி கழன்று விழுவதும், உயிரோட்டமாக சித்தரிக்கப்பட்டதாக உள்ளது. இத்திரு ஓவியம் உரோமன் கத்தோலிக்க திருச்சபையினர்களிடையே மிகவும் புகழ் பெற்று விளங்குகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து அக்டோபர் மாதம் 7 - ஆம் நாள் ''ஜெபமாலை அன்னை விழா'' கொண்டாடப்பட்டு வருகின்றது. பாரம்பரிய முறைப்படி ஜெபமாலையில் 15 மறைப்பொருட்களை தியானிக்கும் வழக்கம் இருந்தது இதன் அடிப்படையிலேயே திருத்தந்தை புனித ஐந்தாம் பயஸ் இந்த ஜெப முயற்சியை அதிகாரப்பூர்வமாக அறிவித்தா.ர் 2002 - ல் இதனோடு மேலும் ஐந்து மறை பொருட்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் ஒளியின் மறைப்பொருள் எனும் பெயரில் சேர்த்தார்.

1380 - ஆம் ஆண்டு முதல் கார்மேல் சபையினர் ஜூலை 16 - ஆம் நாளை ''கார்மேல்மாதா'' திருவிழாவாக கொண்டாடி வருகின்றனர். அன்றைய நாளின் திருவழிப்பாட்டில் கார்மேல் சபை துறவியர் உத்தரியம் எனப்படும் கழுத்துப்பட்டையை ஆசீர்வதித்து இறை மக்களுக்கு வழங்குவர்.





# அன்னையின் (55) திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## அலங்கார அன்னை பேராலயம், கும்பகோணம்

கோபுரங்களின் நகரமாம் குடந்தையில், பெயருக்கேற்ற வகையில் திரும்பும் இடம் எல்லாம் கோவில் கோபுரங்களால் நிறைந்திருப்பதைக் காணமுடியும். குடந்தை என்றழைக்கப்படும் கும்பகோணம் காவேரி ஆற்றுக்கும், அரசலாற்றுக்கும் இடையில் அமைந்த ஒரு வரலாற்று சிறப்புமிக்க நகரமாகும். சைவமும், வைணவமும் தழைத்தோங்கும் இந்நகரில் கிறிஸ்தவம் வேரூன்றியது இறைவனின் கருணையினால்தான் என்றால் மிகையாகாது.

செந்நீர் புனிதராம் புனித ஜான் தே பிரிட்டோ கி.பி. 1673ஆம் ஆண்டு இளம் இயேசு சபை துறவியாக இந்தியாவில் பதம் பதித்தார். மறவ நாட்டிற்கு இயேசுவை அறிவிக்க வந்த அவர், கி.பி. 1673 முதல் கி.பி. 1684ஆம் ஆண்டு இடைப்பட்ட காலத்தில் பல இடங்களில் பணியாற்றினார். அங்ஙனம் பணியாற்றிய இடங்களில் கும்பகோணமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. அந்நாட்களில், கிறிஸ்தவ குருக்கள் தத்துவாஞ்சேரியில் தங்கி பணியாற்றினர். எனவே, 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே குடந்தையில் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் எனலாம்.

கி.பி. 1760ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1840ஆம் ஆண்டு வரை கும்பகோணம் பில்லாவடந்தை பங்கை வழிநடத்திய கோவை குருக்களால் வழிநடத்தப்பட்டது. கி.பி. 1840ஆம் ஆண்டுக்கு பிறகே கும்பகோணம் தனி பங்காக ஏற்படுத்தப்பட்டது.

ஆங்கிலேய ஆட்சி காலத்தில் கும்பகோணம் தனிச்சிறப்பு மிக்க நகராக விளங்கியது. கும்பகோணத்தில் கலெக்டர் அலுவலகம் மற்றும் பிற முக்கியமான அரசு அலுவலகங்கள் கும்பகோணத்தில் ஏற்படுத்தப்பட்டன. இக்காலக்கட்டத்தில், கும்பகோணம் கலெக்டர் அலுவலகத்தில் எழுத்தர் பணியில் பாண்டிச்சேரியை சார்ந்த சுவாமிநாதர் என்பவர் பணியில் சேர்ந்தார். கிறிஸ்தவரான இவர் தனது திறமையாலும், நேர்மையான பணியாலும் மேல் அதிகாரிகளிடம் நற்பெயர் பெற்றார். அவரின் திறமையையும், கடின உழைப்பையும் பாராட்டும் விதமாக அரசு அவருக்கு 50 வேலி நிலத்தை கி.பி 1828ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் தேதி மானியமாக வழங்கியது.

செல்வந்தராய் இருந்த சுவாமிநாதர் குணத்திலும் சிறந்து விளங்கினார். தர்ம சிந்தனை உடையவரான இவர், கும்பகோணத்தை பங்காக பல முயற்சிகள் எடுத்தார். தனது அதிகாரவரம்பிற்கு உட்பட்டு பல கிறிஸ்தவர்கள் கும்பகோணத்தில் குடியேற உதவிபுரிந்தார். கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே, ஏற்கனவே இருந்த செபக்கூடம் அவர்களுக்கு போதவில்லை. இடப்பற்றாக்குறையை உணர்ந்த சுவாமிநாதர் கும்பகோணத்தில் ஒரு பெரிய ஆலயம் கட்டப்பட வேண்டும் என்பதில் உறுதிகொண்டார். தன் சொந்த செலவில் அந்த ஆலயத்தை எழுப்பும் பணிகளை தொடங்கினார். கி.பி. 1839ஆம் ஆண்டு ஆயத்த வேலைகள் முடிவடைந்து ஆலயத்தின் சுவர்கள் கட்டப்பட்டு கொண்டிருக்கும் போதே சுவாமிநாதர் இறைவனடி சேர்ந்தார்.

தந்தையின் மறைவுக்கு பிறகு அவரது தனயர்கள் தந்தையின் விருப்பத்தை நிறைவுக்கு கொண்டுவர எல்லா முயற்சிகளையும் எடுத்தார்கள். சுவாமிநாதரின் பிள்ளைகளான தம்புசாமி, துரைசாமி இருவரும் தந்தையின் பதத்தை பின்பற்றி பக்தியில் சிறந்தவர்களாக இருந்தனர். துரைசாமி கலெக்டர் அலுவலகத்திலேயே பணிநியமனம் பெற்றார். ஆலயத்தின் மூன்று பக்க சுவர்களும் கம்பீரமாக எழுந்து நின்றன. ஆலயத்தின் பீடப்பகுதியும், முகப்பு பகுதியும் பாண்டிசேரி ஜென்மராக்கினி ஆலயம் போன்று எழுப்பப்பட்டு அதே அழகுடன் விளங்கியது. ஆலய பீடத்தின் மீது அலங்கார அன்னையின் சுரூபம் நிறுவப்பட்டது. தம்புசாமியும், துரைசாமியும் ஆலய வழிபாடுகளுக்கும், திருப்பலிக்கும் தேவையான பொருட்களை சேகரித்து அளித்தனர். இங்ஙனம் கட்டப்பட்ட ஆலயமானது கி.பி. 1840ஆம் ஆண்டு மக்களின் பயன்பாட்டிற்காக அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

இக்காலக்கட்டத்தில் கும்பகோணம் பாண்டிசேரி மறைமாவட்டத்திற்கு உட்பட்டதாக இருந்தது. பாண்டிசேரியானது கி.பி. 1836ஆம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் தேதி அப்போஸ்தலிக் விக்காரியேட்டானது. அதன் முதல் அப்போஸ்தலிக் விக்கராக ஆயர் பொன்னாந்து அவர்கள் நியமிக்கப்பட்டார். அந்நாள்களில் ஆயர் பொன்னாந்து அவர்கள் மறைமாவட்டத்தை வழிநடத்தி வந்தார்.

கோவில் கட்டி முடிக்கப்பட்டபின் கி.பி. 1840ஆம் ஆண்டிலிருந்து லாசர் சுவாமிகள் கும்பகோணம் ஆலயத்தை கவனித்து வந்தார். இவர்தான் அங்கு முதல் குருக்கள் இல்லத்தையும் கட்டியவராவார்.







நடந்த வாக்கெடுப்பில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. இதில் 1114 பேர் மரியா பற்றிய ஒரு தனி ஏடு வேண்டாம் என்றும் 1047 பேர் தனி ஏடு வேண்டும் என்று வாக்களித்தனர். மொத்த வாக்காளர்கள் 2193 அதில் செல்லாதவை 5 . ஆக 40 ஓட்டுக்கள் வித்தியாசத்தில் மரியா பற்றிய போதனைகள் “திரு அவை” என்னும் ஏட்டுடன் இணைக்க முடிவு செய்யப்பட்டது. மறுமலர்ச்சி சிந்தனை வெற்றிப் பெற்றது. மரியாவைப் பற்றி தனியாக மரபுப் பாணியில் பேசுவதைவிட திருச்சபையுடன் இணைத்து சிந்திப்பதே முறையானது எனும் இந்த முடிவிற்கு ஏற்ப திருச்சபை என்னும் சங்க ஏட்டில் இறுதி அதிகாரமாக சங்கத்தில் மரியா பற்றிய மறுமலர்ச்சி சிந்தனைகளும் அணுகுமுறைகளும் ஓரளவுக்கு இடம் பெற்றது. மரபுச் சிந்தனைகளும் மறுமலர்ச்சி சிந்தனைகளும் சேர்ந்தே உருவாக்கப் பட்டதுதான் இவ்வேடு.

மரியா பற்றிய இரண்டாம் வத்திக்கான் வழங்கியுள்ள படிப்பினைகளின் மூன்று மையக் கூறுகளை இனிவரும் இதழ்களில் நாம் விரிவாக காணலாம். அவை விவிலிய அடிப்படை, கிறிஸ்துமையம், திருச்சபை தொடர்பு என்பவையாகும் . இவைகளைப் பற்றி நாம் தொடர்ந்து காண்போம்.

24 ஆம் பக்க தொடர்ச்சி........

ஏழை சிறுமிகளுக்கு கல்வி, ஏழை குடும்பத்திற்கு உணவு, நோயாளிகளுக்கு மருத்துவம் என அனைத்தையும் செய்து வந்தார். இந்த பணி தொடர்ந்து நடைபெற வேண்டி, ஒரு கன்னியர்களின் சபையை தொடங்கினார்: கலேயாட்சா மரியின் ஊழியர் கன்னியர்களின் சபை (Servite Sisters of Galeazza). இந்த சபை இன்றும் மரியின் சபை குருக்களோடு சேர்ந்து பல இடங்களில் பணியாற்றி வருகிறது. இவ்வாறு பல நன்மைகள் செய்த நமது பெர்தினாண்தோ 1893 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். 1999 ஆம் ஆண்டு புனித இரண்டாம் அருள் சின்னப்பர் இவருக்கு முத்திப்பேறு பட்டம் அளித்தார். ஜூலை 1 ஆம் நாள் இவருடைய நினைவு கொண்டாடப்படுகிற்து. இந்த சபையின் அருட் சகோதரிகளின் பணி என்றும் நல்ல முறையில் சிறப்படைய வாழ்த்துவோம் மற்றும் செபிப்போம்.

குறிப்பாக அவை அண்மைக் காலத்திலும் கண்டிருப்பது ஒரு மிகை வளர்ச்சி என இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பே கத்தோலிக்கர் பலர் உணர்ந்தனர். இறையியலார் சிலர் இதனை வெளிப்படையாக எடுத்துக் கூறவும் செய்தனர். ஆனால் அன்று கத்தோலிக்கத்தின பல வட்டாரங்களில் நிலவிய “மரியா மைய” சூழமையில் இவர்கள் சுட்டிக் காட்டிய உண்மை ஏற்கப்படவில்லை. மாறாக மரியா வணக்கத்திலும் சிந்தனையிலும் மிகைப் போக்குகள் எந்த அளவுக்குப் பரவியிருந்தன என்றால் திருத்தந்தை 12 ம் பத்திநாதரே இத்தகைய மிகைப் படுத்தலுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்தார்.


இருப்பினும் இரண்டாம் வத்திக்கான் சங்கம் துவங்கியபோது அது மரியாவை பற்றிய இன்னொரு உண்மையை விசுவாச கோட்பாடாக அறிக்கையிடும் என மரியா பக்தர்கள் எதிர்பார்த்தனர்.

சங்க தயாரிப்புக்குழு மரியாவை பற்றி புதிய விசுவாசக் கோட்பாடு எதனையும் அறிக்கையிட முன்னேற்பாடு செய்யவில்லை என்றாலும் மரியா பற்றி தனி ஒரு ஏடு தயாரித்திருந்தது. அது பெருமளவிற்கு மரபு மரியியல் பாணியிலேயே அமைந்திருந்தது. தகுதியுடைமை, தனித்தன்மை, இயேசுவுடன் இணை ஒப்புமை என்னும் மரியியல் மரபுத் தத்துவங்களே பெரிதும் அதில் தலைதூக்கி நின்றன.

மரியா வணக்கம் பற்றிய மறுமலர்ச்சிச் சிந்தனைப் போக்கு கொண்ட சங்கத் தந்தையர்கள் பலர் அந்த தயாரிப்பு ஏட்டினை மறுத்தனர். அவர்கள் ஏற்க மறுத்தது அந்த ஏட்டின் மரியியல் கண்ணோக்கத்தையும் கருத்துக்களையும் மட்டுமன்று; மாறாக மரியாவை பற்றி தனி ஒரு ஏடு வெளியிடுவதைவிட, மரியாவை திருச்சபையுடன் தொடர்பு படுத்தி நோக்கும் வகையில் அதனை திருச்சபை என்னும் ஏட்டுடன் இணைத்து வெளியிடுவதே பொருளும் பொருத்தமும் ஆகும் என கருதினர். இந்த மறுமலாச்சிக் கருத்திற்கு எதிராக மரபு சிந்தனை கொண்ட பலர் மரியா பற்றி தனி ஏடு வேண்டும் என வற்புறுத்தினர். இவ்வாறு இரண்டாம் வத்திக்கான் சங்க தளத்தில் மரியா பற்றிய மரபு கண்ணோக்கும் மறுமலர்ச்சி சிந்தனையும் மோதிக் கொண்டன. இறுதியில்1963 ம் ஆண்டு அக்டோபர் 4 ம் நாள்







கி.பி. 1850ஆம் ஆண்டிலிருந்து தெப்போமியர் சுவாமிகள் கும்பகோணத்தில் பணியாற்றினார். கி.பி. 1856லிருந்து கி.பி. 1859 வரை லவனான் சுவாமிகள் கும்பகோணத்தை வழிநடத்தினார்.

இக்காலக்கட்டத்தில் ஆலயம் கட்ட பெரிதும் உதவிய தம்புசாமி அவர்களுக்கு கண்புரை ஏற்பட்டது. பாண்டிச்சேரி மருத்துவர்கள் கூட சரிசெய்ய இயலாத நிலையில், சென்னை சென்றாலும் குணப்படுத்துவது கடினம் என்று கூறி கைவிட்டனர். அந்நிலையில் அங்கிருந்த அன்னையின் மாசற்ற இருதய சபையை சார்ந்த சகோதரிகள் தங்களிடம் இருந்த புனித லூர்து அன்னையின் தீர்த்தத்தை கொடுத்து கண்களில் தடவ அறிவுறுத்தினார்கள். நம்பிக்கையுடன் அதை செய்த தம்புசாமி அவர்களுக்கு அற்புதமாக குணமும் கிடைத்தது. இச்செய்தி காட்டு தீயென பரவியது. அன்னையின் பரிந்துரையாலும், தீர்த்தத்தாலும் தனக்கு கிடைக்கப்பெற்ற சுகத்திற்கு நன்றியாக, தம்புசாமி அவர்கள் லூர்து அன்னையின் திருஉருவம் ஒன்றை பிரான்சிலிருந்து வரவழைத்து அதை கும்பகோணம் அலங்கார அன்னை கோவிலுக்கு கி.பி. 1886ஆம் ஆண்டு அளித்தார். அத்திருஉருவத்தை வைத்து அன்னைக்கு கெபியானது லூர்து நகரில் மசபேயில் குகையில் அன்னை காட்சி தந்த நூற்றாண்டின் நினைவாக கி.பி. 1958ல் கட்டப்பட்டது.

கி.பி. 1899ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி கும்பகோணம் மறைமாவட்டம் உதயமானது. அப்போது, இந்த ஆலயமே மறைமாவட்ட பேராலயமாகவும் விளங்கியது. மறைமாவட்ட தலைமை ஆலயத்திற்கு இன்னும் பெரிய ஆலயம் தேவைப்பட்டதால், கி.பி. 1924ஆம் ஆண்டு ஆயர் அகுஸ்தீன் ஷப்பூய் அவர்களால் புதிய பேராலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலும் ஆயர் அவர்களின் பெருமுயற்சியினாலும், பல வேறு நல்உள்ளங்களின் பெரும் உதவியினாலும் பேராலயம் கட்டிடம் வேகமாக விண்ணோக்கி எழும்பியது. பேராலயப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே தனது வயதின் காரணமாக ஆயர் ஷப்பூய் தனது



பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அதன்பின், மறைமாவட்ட பரிபாலராக பணியாற்றி அருட்பணி M.A. சேவியர் அடிகளாரின் அயராத உழைப்பின் ஆலயப்பணிகள் தொடர்ந்து நடைபெற்றன. இந்நிலையில், மறைமாவட்டத்தின் முதல் சுதேச ஆயராக பீட்டர் பிரான்சிஸ் அவர்கள் திருத்தந்தை பதினோராம் பயஸ் அவர்களால் நியமிக்கப்பட்டு, கி.பி. 1931 ஆம் ஆண்டு ஜீன் 29ஆம் தேதி கும்பகோணத்தின் ஆயராக அருள்பொழிவு செய்யப்பட்டார். ஆயராக பொறுப்பேற்றவுடன் சுதேச குருக்களின் பயிற்சியிலும், மறைபணியிலும் ஆர்வம் காட்டிய அவர், மறைமாட்ட பேராலய கட்டுமானத்திலும் அக்கறை கொண்டார். இவரின் கடின முயற்சியினால் எழில்மிகு பேராலயம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு கி.பி. 1936ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் நாள் ஆண்டவருக்கு நேர்ந்தளிக்கப்பட்டு அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.




மத்தியக் கால ஐரோப்பாவில் செழிப்புடன் வளர்ந்த கோத்திக் கலை வடிவத்தில் நேர்த்தியாகக் கட்டப்பட்டு கம்பீரமாக நிமிர்ந்து நின்று காண்போரை வியக்க வைக்கும் பேராலயமாக இது விளங்குகிறது. உரோமானிய கட்டிடக்கலை வடிவில் தோன்றிய விலா எழும்பு வளைவு (Ribbed Vault) அல்லது பிரெஞ்சு வளைவு (French Vault) கொண்ட வளைக்கூரையும், அரேபியக் கட்டிடக்கலையில் தோன்றி ஐரோப்பாவில் சற்று உருமாற்றம் பெற்ற நுண் கூம்பு வளைவுக் (Pointed Arch) கொண்ட வாயில்களையும், சாளரங்களையும் மற்றும் பறக்கும் சுவர் முட்டுகளையும் (Flying Buttress) தன்னகத்தே கொண்டு பிரான்ஸ் நாட்டில் வளர்த்தெடுக்கப்பட்ட கட்டிடக்கலையில் உருவானது இப்பேராலயமாகும்.



கும்பகோண நகரத்தின் வான்வெளியை அலங்கரிக்கும் இப்பேராலயம் பரந்து விரிந்த இம்மறைமாவட்ட விசுவாசிகளின்





# மரியா - கடவுளின் கடிதம்



24

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

**மறுமலர்ச்சி சிந்தனையில் மரியா**

கத்தோலிக்க கிறிஸ்தவத்திற்கு இது ஒரு மறுமலர்ச்சி காலம். மரபுச் சிந்தனைகள், செயல்முறைகள் பல இன்று ஆய்வுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன. புதுப்புது பார்வைகளும் பாதைகளும் புலர்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு, மரபு கிறிஸ்தவம், மாறிவிட்ட தனது சூழமைவிற்கு ஏற்ப, நற்செய்தியின் ஒளியில் தன்னையும் தனது பணியையும் புதுப்பிக்கத் துவங்கியுள்ளது. இது வாழும் கிறிஸ்துவத்தின் வளர்ச்சிக்கு நல்லதொரு அறிகுறி மட்டுமன்று. இதுவே இரண்டாம் வத்திக்கான் சங்கத்திலிருந்து கத்தோலிக்க கிறிஸ்தவ சமூகம் தொடங்கித் தொடரும் புதியதொரு விசுவாசப் பயணம்.

இத்தகைய மறு ஆய்விற்கும் மாற்றத்திற்கும் இன்று உள்ளாகிக் கொண்டிருக்கும் துறைகளுள் ஒன்றுதான் மரியா வணக்கம். திருச்சபையின் வாழ்விலும் வணக்கத்திலும் மரியாவுக்குரிய இடம் யாது என்று மறுமலர்ச்சியின் பொதுச்சங்கமாகிய இரண்டாம் வத்திக்கான் மீண்டும் சிந்தித்தது. மரபு சிந்தனைகளையும் மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் ஆழமாக மோதவிட்டது. இறுதியாக, மரியா பற்றிய நமது சிந்தனைகளுக்கும் பக்திமுறைகளுக்கும் அடிப்படையாக இன்று விளங்கவேண்டியது புதிய அணுகுமுறைகளையும் வரையறைகளையும் வகுத்துத் தந்துள்ளது. “திருச்சபை” எனும் சங்க ஏட்டில் இறுதி அதிகாரத்தில் இவற்றை நாம் காணலாம்.

சங்க படிப்பினைகளையும் , அதனையொட்டி மலர்ந்துள்ள மறுமலர்ச்சி மரியியலும் வழங்கும் புதிய பார்வை எது? மரியா பற்றிய நமது நம்பிக்கைகளிலும் பக்தி முறைகளிலும் அது ஏற்படுத்தும் தாக்கங்கள் யாவை? அதன் நிறைகுறைகள் யாவை? எனச் சிந்திக்க முயல்கிறது இக்கட்டுரை.

**சங்கம் காட்டும் பாதையில்**

மரபு மரியா வணக்கமும் சிந்தனைகளும் வரம்புகளை கடந்து வளர்ந்துவிட்டன. அவை தங்களது மையத்தை விட்டு விலகி நிற்கிறது.



# முத்திப்பேறு பெர்தினாண்தோ மரியா பாச்சிலியேறி OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

முத்திபேறு. பெர்தினாண்தோ மரியா பாச்சிலியேறி 1821 ஆம் ஆண்டு 14 ஆம் நாள், போலோன்யா (Bologna) உயர் மறை மாவட்டத்தின், ரெனே (Rene) என்கிற ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே, தன் தந்தையின் உதவியால், நல்ல கல்விக்கூடங்களில், கல்வி கற்றுக்கொள்ள வாய்ப்புகளை பெற்றார். இவ்வாறு, போலொஞ நகரத்தில் இயேசு சபை துறவிகளின் கல்வி கூடத்தில் கற்றுக்கொண்டிருந்த போது, ஒரு துறவியாக தன்னை அர்ப்பணிக்க முடிவு செய்தார். இதனால் உரோமை நகருக்கு நவதுறவு மேற்கொள்ள அனுப்பப்பட்டார். இவருடைய உடல்நிலை, நவதுறவு இல்லத்தில் உள்ள பயிற்சிகளுக்கு ஒத்துழைக்காததால், திருப்பி அனுப்பப்பட்டார். பின்னர், போலோன்யா உயர் மறை மாவட்டத்தின் குரு மடத்தில் சேர்ந்து, தனது படிப்பை நிறைவு செய்து, குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தொடர்ந்து, திரு அவையின் சட்டங்களை படித்து தேர்ச்சி பெற்றார். இவ்வாறு, திரு அவையின் ஒரு பெரிய பொறுப்பிற்காக தயாரித்து கொண்டிருக்கும் போது, கலேயாட்சா (Galeazza) என்கிற ஒரு சிறிய கிராமத்தில் 1851 ஆம் ஆண்டு, பங்குத்தந்தை இல்லாத காரணத்தினால், உதவி செய்வதற்காக அனுப்பப்பட்டார். மக்களோடு இணைந்து பல பணிகளை மேற்கொண்டு, சமூக வாழ்விலும், ஆன்மிக வாழ்விலும், இறைமக்களை நன்முறையில் வழிநடத்தினார். சுமார் ஓராண்டு காலமாக அவர் இவ்வாறு உதவி செய்து வந்தபொழுது, மக்கள் இவரின் புனித தன்மையை உணர்ந்து, இவரையே, பங்குத்தந்தையாக நியமிக்க ஆயரிடம் கேட்டுக்கொண்டனர். பின், ஆயரின் கட்டளையின் படி, தனது, பல்வேறு பெரிய பதவிகளுக்கான பாதைகளை துறந்து, இந்த சிறிய பங்கில், பங்குத்தந்தையாக இருக்க ஒப்புக்கொண்டார். சுமார், 41 ஆண்டுகள் அங்கேயே இருந்து, தன் வாழ்நாள் முழுவதும், மக்களுக்காவே பணி செய்தர். இந்த 41 ஆண்டுகளில், விவசாய மக்களோடு சேர்ந்து, அவர்களின் சமூக மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்க்காக உழைத்தார். தான் போலோன்யா நகரத்தில் படித்துக்கொண்டிருந்த போது, மரியின் ஊழியர் சபை துறவிகளையும், அவர்களின் ஆன்மீகத்தையும் பற்றி கேட்டு அறிந்திருந்தார். இந்த வியாகுல மாதாவின் ஆன்மிகத்தால், ஈர்க்கப்பட்டு, அவரும், மரியின் ஊழியர் சபையின் பொது நிலையினர் பகுதியில் சேர்த்து, வார்த்தைப்பாடு எடுத்துக்கொண்டார். மேலும், தான் இருந்த பங்கில், மரியின் ஊழியர், ஆன்மீகத்தை தினமும், இறைமக்களிடம் எடுத்து கூறி, அந்த பங்கிலும் மரியின் ஊழியர் சபையின் பொது நிலையினருக்கான பிரிவை அங்கும் நிறுவினார். இவர்களின் மூலம்,

தொடர்ச்சி 27 ஆம் பக்கம்.......







நம்பிக்கைக்கு ஒரு அடையாளமாக விளங்குகிறது.

கும்பகோணம் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்ட நூற்றாண்டின் நினைவாக கி.பி. 1999ஆம் ஆண்டு வட்டார அதிபரும், பங்கு தந்தையுமான அருட்பணி. அந்துவான் அவர்களால் பேராலயம் முழுமையாக புதுப்பிக்கப்பட்டது. ஆலயத்தின் பீடம் முழுமையாக மாற்றி அமைக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட ஆலயமானது கி.பி. 1999ஆம் ஆண்டு ஆகஸ்டு 28ஆம் தேதி ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

அருட்பணி. மார்டின் தெ பொரெஸ் அவர்கள் பங்குபணியாளராக இருந்த காலத்தில் புனித அருளானந்தருக்கு ஒரு நினைவுச் சின்னமும், நற்கருணை ஆலயமும் எழுப்பப்பட்டு, கி.பி 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு 6ஆம் நாள் ஆயர் F. அந்தோணிசாமி அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

எண்பது ஆண்டுகள் பல கடந்த நிலையில் பேராலயக்கூரை பழுதடைந்ததால், அதை புதுப்பிக்க முயற்சிகள் எடுத்தார் அந்நாள் பங்கு தந்தை அருட்பணி. தேவதாஸ் அவர்கள். கூரையோடு ஆலயத்தை முழுமையாக புதுப்பிக்கவும், பித்தளை கைவினைப் பொருட்களுக்கு பெயர் பெற்ற குடந்தை நகரில் உள்ள ஆலயத்தில் ஆலயத்தின் முன் கதவுகளை பித்தளையால் நிர்மாணிக்கவும் தீர்மானிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன, பெரும் பொருட்செலவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் நிறைவுற்று, கி.பி. 2017ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் தேதி, பாண்டி-கடலூர் உயர்மறைமாவட்ட பேராயர் மேதகு ஆனந்தராயர் தலைமையில், குடந்தை ஆயர் மேதகு F. அந்தோணிசாமி, தஞ்சை ஆயர் மேதகு தேவதாஸ் அம்புரோஸ், சேலம் ஆயர் சிங்கராயர், குடந்தை முன்னாள் ஆயர் பீட்டர் ரெமிசியூஸ் ஆகியோர் இணைந்து புதுப்பிக்கப்பட்ட ஆலயத்தை அர்ச்சித்து புனிதப்படுத்தினர்.

நூற்றாண்டை நோக்கி வீறுநடை போடும் புனித அலங்கார அன்னை பேராலயத்தின் வரலாற்றை எழுத தேவையான அனைத்து தகவல்களையும் தந்து உவிய குடந்தை மறைமாவட்ட வரலாற்று ஆய்வாளர் அருட்பணி. அந்தோணி ஜோசப் அவர்களுக்கும், தகவல்களையும் புகைப்படங்களையும் சேகரித்து அனுப்பிய என் சகோதரர் திருவாளர். அடைக்கலசாமி அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

1 2 பேதுரு,

1 2 3 யோவான்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | | | 2 |
| | 7 | | | | | | | 6 | |
| | | 10 | | | | | 9 | | |
| | | | | 14 | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | 13 | | | | |
| | | | 12 | | | | | | |
| | | | | | | 11 | | | |
| | 8 | | | | | | | 5 | |
| 3 | | | | | | | | | 1 |

**வலமிருந்து இடம்**

1)நீங்கள் 'தந்தையே' என அழைத்து மன்றாடுபவர், ஆளைப் பார்த்தல்ல,.......... செயல்களின் படியே தீர்ப்பு வழங்குகிறார்.

2) இறுதியாக, நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டிருங்கள். பிறரிடம்............. சகோதரர் அன்பும் பரிவுள்ளமும் மனத்தாழ்மையும் கொண்டிருங்கள்.

5) தொடக்க முதல் இருந்த வாழ்வு ............ வாக்கை நாங்கள் கேட்டோம்: கண்ணால் கண்டோம்: உற்று நோக்கினோம்: கையால் தொட்டுணர்ந்தோம்.

6) நீங்கள் அந்தப் போலி இறைவாக்கினர்களை வென்றுவிட்டீர்கள்: உங்களுள் இருப்பவர் உலகில் ........... அந்த எதிர்க் கிறிஸ்துவைவிடப் பெரியவர்.

9) நீங்கள் 'தந்தையே' என அழைத்து மன்றாடுபவர், ஆளைப் பார்த்தல்ல,.......... செயல்களின் படியே தீர்ப்பு வழங்குகிறார்.

11) நேர்மையாளரே மீட்கப்படுவது அரிதென்றால், இறைப்பற்றில்லாதோரும்,.......... தண்டனை பெறுவது திண்ணமன்றோ!

**இடமிருந்து வலம்**

3) அவர் வான தூதர்களையும் அதிகாரங்களையும் வல்லமைகளையும் தமக்குப் பணிய வைத்து, விண்ணுலகம் சென்று, கடவுளின் வலப்பக்கத்தில் .............

4) பன்றியைக் கழுவினாலும் அது மீண்டும் சேற்றிலே புரளும்' .......... ஒரு நீதிமொழி.

7) தூய....... நீரும் இரத்தமுமே அவை. இம்மூன்றும் ஒரே நோக்கம் கொண்டவை





**முதல் வாசக முன்னுரை**

தானியேல் இறைவாக்கினர் 4 வகையான அரசாட்சியை பற்றி பேசுகிறார். இவ் நான்கு அரசாட்சியை முறியடிக்கின்ற அரசாட்சியாக மெசியாவின் அரசுடைமை அமையும் எனவும். அவ்வரசு நீதியும் உண்மையும், நீடிய நாட்களும் கொண்ட அரசாக அமையும் என்கிறார். அந்த அரசை இவ்வுலகில் நிலை நிறுத்துபவர் இயேசுவே என்பதை பழைய ஏற்பாட்டின் முக்கிய நபர்களான மோசே மற்றும் எலியா இவர்களின் சந்திப்பு உணர்த்துகிறது. கிறிஸ்துவே உண்மையான மெசியா என்று தனது தெய்வீக பிரசன்னத்தால் தம்மை வெளிப்படுத்தும் தானியேலின் காட்சியை குறித்து வாசிக்க கேட்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

கிறிஸ்துவின் தெய்வீக பிரசன்னம் உண்மையான நிகழ்வு எனவும் அவரது உருமாற்ற நிகழ்வு நமது விசுவாச வாழ்வோடு தொடர்பு கொண்ட ஓர் நிகழ்வு என்பதை புனித பேதுரு விளக்குகின்றார். எனவே இத்தகைய கிறிஸ்துவின் தெய்வீக பிரசன்னத்தை நாமும் பெற்றிட பழைய பாவத்திலிருந்து வெளியேறி உருமாற்றம் பெற இன்றைய இரண்டாம் வாசகம் அழைப்பு விடுக்கின்றது.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா , எம் திருத்தந்தை, ஆயர்கள் , குருக்கள் , இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது மகனின் தெய்வீக பிரசன்னத்தை உணர்ந்து, அவரே உண்மையான மெசியா என்று விசுவாசித்து கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, பாடுகளின் நிறைவே மாட்சிமை என்பதை உமது மகனின் உருமாற்ற நிகழ்வு எங்களுக்கு உணர்த்துகின்றது. நாங்கள் எங்களது வாழ்வில் வருகின்ற துன்பங்களையும், இன்னல்களையும் ஏற்றுக் கொண்டு உமது மாட்சிமையில் பங்கு பெற தேவையான இறையருளை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, உமது சாயலாக படைக்கப்பட்டுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது பாவ வாழ்வை விட்டுவிட்டு நாங்களும் உருமாற்றம் பெற்று உமது தெய்வீக சாயலை கொண்டு வாழ எங்களுக்கு அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உம் சீடர்கள் உமது மாட்சிமையை தாபோர் மலையில் கண்டு மகிழ்ந்தது போல் நாங்களும் ஒவ்வொரு நாளும் கல்வாரி பலியில் உமது தெய்வீக பிரசன்னத்தை நற்கருணையில் கண்டு மகிழ்வோடும் நம்பிக்கையோடும் சமாதானத்தோடும் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா எம் திருத்தந்தை , ஆயர்கள் , குருக்கள் , இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது இறை ஞானத்தை பெற்று உமது திருவுளத்தை மட்டுமே செயல்படுத்தி வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வில் உம்மை மட்டுமே பற்றிக் கொண்டு உம்மையும் உமது அரசையும் தேடுகின்ற மக்களாக எங்களை வழி நடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் உலக நாட்டங்களையும் உலக காரியங்களைம் நாடாமல் உமது உயிருள்ள பிரசன்னத்தை ஒவ்வொரு நாளும் தேடவும் மேலும் நன்மை தீமையை பகுத்தறிந்து வாழ தேவையான ஞானத்தை பெற்று வாழவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா இன்றைய நவீன உலகில் மனிதன் அழிந்து போகின்ற செல்வங்களின் மீது அக்கறை கொள்ளாமல் ஒப்பற்ற செல்வமாகிய கிறிஸ்துவை ஆதயமாக்கி கொள்ளவும் அவரது இறையரசு ஒன்றை மட்டுமே தேடவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## ஆண்டவரின் உருமாற்றம் விழா(06.08.2023)

**தானியேல் 7:9-10;13-14 2பேதுரு1:16-19 லூக் 9:28-36**

**முன்னுரை**

இன்று நமது தாய் திரு அவை நமதாண்டவரின் உருமாற்ற விழாவைச் சிறப்பிக்கின்றது. இவ்விழா நமது ஆண்டவர், நம்மீது எவ்வளவு அன்பு கொண்டுள்ளார் என்பதைத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றது. கடவுள் தன்மையில் விளங்கிய அவர் அதைப் பற்றிக் கொண்டிராமல் மனித உருவெடுத்து அடிமையின் கோலத்தை ஏற்றுக் கொண்டது, மனித குலத்தின் மீது கொண்ட அன்பிற்காகவே என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. தானே படைப்பின் நிறைவு, திருச்சட்டம் மற்றும் இறைவாக்குகளின் நிறைவும் நானே என்று இயேசு தனது மாட்சிமை நிறைந்த மறு உருவில் தெளிவுபடுத்துகின்றார்.

தாபோர் மலையில் உருமாற்றம் பெற்று தனது மாட்சியை வெளிப்படுத்திய இறைவன் ஒவ்வொருநாளும் அப்ப இரச வடிவிலே நற்கருணையாக உருமாறி நம்மோடு உறவாடுகின்றார். அவரது தெய்வீக பிரசன்னத்தை நாம் உணர்ந்திட நமது விசுவாசம் உறுதிபட வேண்டும். நமது உள்ளங்களில் மயான அமைதி குடி கொள்ள வேண்டும். அதற்கு நாம் மனம்மாற்றம் பெற வேண்டும். எனவே நாமும் கிறிஸ்துவை போல் இறைத்திட்டத்தோடு நம்மையே நாம் இணைத்துக் கொண்டு கல்வாரி மலை நோக்கி பயணிப்போம். நமது கல்வாரி பயணம் நமது விசுவாசத்தை உறுதிபடுத்தி, நாமும் உருமாற்றம் பெற்று இயேசுவின் தெய்வீக மாட்சிமையில் பங்கு பெற்று வாழ தேவையான இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.





8) இவ்வாறு உண்மையையும் அன்பையும் கொண்டு வாழும் நமக்கு தந்தையாம் கடவுளிடமிருந்தும் அவர் மகன் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் வரும் ………. இரக்கமும் அமைதியும் உரித்தாகும்

12) ………… பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்வோம்: உண்மையும் நம்மிடம் இராது.

**கீழிருந்து மேல்**

1) அன்பிற்குரியவர்களே, நீங்கள்………….. தற்காலக் குடிகளுமாய் இருப்பதால், ஆன்மாவை எதிர்த்துப் போர்புரியும் ஊனியல்பின் இச்சைகளை விட்டுவிடும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

3) ஏற்றுக்கொண்ட உண்மையில் உறுதியாகவும் இருக்கின்றீர்கள். ………… அவற்றை மீண்டும் மீண்டும் நினைவுறுத்திக் கொண்டேயிருப்பேன்.

5) அவர் நேர்மையாளரென நீங்கள் அறிந்துகொண்டால், நேர்மையாகச் செயல்படுவோர் ……….. அவரிடமிருந்து பிறந்தவர்கள் என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.

8)இவ்வாறு உண்மையையும் அன்பையும் கொண்டு வாழும் நமக்கு தந்தையாம் கடவுளிடமிருந்தும் அவர் மகன் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் வரும் அருளும் இரக்கமும் ………. உரித்தாகும்

11) சிலுவையின்மீது தம் உடலில் நம்………… அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார்.

12) இப்பண்புகள் உங்களுள் நிறைந்து பெருகுமானால் நம்………… இயேசு கிறிஸ்துவை அறிந்துள்ள நீங்கள் சோம்பேறிகளாகவும் பயனற்றவர்களாகவும் இருக்க முடியாது.

1 ஆனால் பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்வோம்: உண்மையும் நம்மிடம் …………..

**மேலிருந்து கீழ்**

2) அன்பு முத்தம் கொடுத்து நீங்கள் ஒருவர் மற்றவரை வாழ்த்துங்கள். இயேசு கிறிஸ்துவோடு ………….. வாழும் உங்கள் அனைவருக்கும் அமைதி உரித்தாகுக!

4) படைப்பின் தொடக்கத்தில் இருந்ததுபோல ……………… அப்படியே இருக்கிறதே என்று சொல்லுவார்கள்.

6) என் அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது ……….. வெளிப்படவில்லை.

7) இத்தகையோருக்கு உதவுவது நமது கடமை. இவ்வாறு, உண்மைக்காக உழைக்கும் அவர்களின் உடன் உழைப்பாளர்…………….

9) உயிருள்ள கல்லாகிய அவரை ………….. மனிதரால் உதறித் தள்ளப்பட்டதாயினும் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட உயர்மதிப்புள்ள கல் அதுவே.

10) இறுதியாக, நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டிருங்கள். பிறரிடம் ................- சகோதரர் அன்பும் பரிவுள்ளமும் மனத்தாழ்மையும் கொண்டிருங்கள்.

14) என் பிள்ளைகள் உண்மைக்கேற்ப வாழ்ந்து வருகிறார்களெனக் கேள்விப்படுவதைவிட .............பெரு மகிழ்ச்சி எனக்கு இல்லை.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-07-2023**

# கார்மல் அன்னை திருவிழா ③



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

அழகியத் தோட்டம் அணிகலனே வாட்டம்
கார்மல் மலையதன் காவியத் தோற்றம்
எலியா தொடங்கி திருமுழுக்கார் வரையிலும்
இறைவாக்கினர் பலரும் இறைஞ்சிய தோட்டம்
பாகாலை வணங்கியோரை ஒழித்த மலையது
போலி இறைவாக்கினர்களை அழித்த மலையது
வான்தீயை வரவழைத்த வல்லதேவன் மலையது
வான்மழையை பஞ்சநாளில் பொழியச்செய்த மலையது.
சீனாய் ஒரேபு தாபோர் கல்வாரிபோல்
தாமாய் கடவுளே தனக்காய்ந்த மலையது
தவமாய் தவமிருந்த முனிகள் மலையது
விதமாய் அருளார்ந்த புனித மலையது
கன்னி கருவுற்று கடவுளைப் பெறுவாரென
காட்சி தெரிந்த கடவுளின் மலையது
மீட்பர் வருகையினை நேரில் பார்த்திடவே
மேய்ப்பர் பலருமே காத்த மலையது
அன்னையின் கோவில் முளைத்த மலையது
அன்னையே கோலமாய் உதித்த மலையது
சூலை பதினாறின் சிறப்பு மலையது
சைமன்ஸ்போக் புனிதருக்கு சுடர்ந்த மலையது
உத்தரியக் கயிறீந்த உன்னத மலையது
உத்தரிக்கும் ஆன்மாக்களை உயர்த்தும் மலையது
குருக்கள் உடுப்பினையும் கொடுத்த மலையது
குடும்ப உறுப்பினரையும் முடுக்கும் மலையது
கார்மல் சபையினரின் வரமான மலையது
காணும் யாவருக்கும் வரமீனும் மலையது
பாவங்கள் அனைத்தையும் போக்கும் மலையது
சாபங்கள் அனைத்திலும் காக்கும் மலையது
கார்மல் அன்னையின் புகழினைப் பாடிடுவோம்
காலமும் அவரின் அருளினைப் பெற்றிடுவோம்
உத்தம மரணமும் அடைந்திட வேண்டிடுவோம்
உன்னதர் நிழலினில் மகிழ்ந்திட இறைஞ்சிடுவோம்.





அன்ப, நேர்மை, நீதி இவ்வுலகில் தழைத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் நாங்கள் அலகைக்கும் அதன் தூதர்களுக்கும் கீழ்ப்படியாமலும் கிறிஸ்துவுக்கும் அவரது போதனைகளுக்கும் கீழ்ப்படிந்து ஒளியின் மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 17 ம் ஞாயிறு(30.07.2023)**

**1 அர 3:5-12 உரோ 8:28-30 மத் 13:44-52**

**முன்னுரை**

தேடுங்கள் கண்டடைவீர்கள், இயேசுவைத் தேடுவோம். இயேசுவைக் கண்டடைய எல்லாவற்றையும் இழப்போம். கிறிஸ்து என்ற விலையுயர்ந்த புதையலை பெறுவோம். இறையரசு என்ற செல்வத்தை பெற்று கொள்ள , நம்மை முழுமையாக இழக்க இன்றைய இறைவார்த்தை வழிபாடு நம்மை அழைக்கின்றது. இறையரசு அழியாதது என்றும் நிலைத்திருக்க கூடிய அன்புள்ள அரசு , அமைதியுள்ள அரசு, நீதியும் நேர்மையான அரசு, எல்லாவற்றுக்கும் மேலாக நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே நமது உள்ளத்தையும் இல்லத்தையும் ஆளும் அரசு.

இப்படிப்பட்ட அரசை கண்டடைவதற்கு, உரிமையாக்கி கொள்வதற்கு வழிமுறையை இன்றைய நற்செய்தியின் உவமைகள் எடுத்துரைக்கின்றன. அதாவது இயேசுவையும், அவரது மதிப்பீடுகளையும் அடைவதற்குரிய பண்பு நலன்களை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கின்றது. கிறிஸ்துவையும் அவரது ஆட்சியையும் தேடினால், மற்றனைத்தும் அதாவது நமது அடிப்படை தேவையான உணவு, உடை, உறைவிடம் ஆகியவை சேர்த்து கொடுக்கப்படும் என்கிறார் இயேசு. எனவே இம்மையில் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் இழக்கும்போது, துறந்தவற்றையெல்லாம் நூறுமடங்காக இம்மையில் பெறுவதோடு மறுமையில் நிலைவாழ்வையும் பெறுவோம் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்கு பெறுவோம். மண்ணக நலன்களை வெறுக்காமல் அவற்றை ஞானத்துடன் சீர்தூக்கிப் பார்க்க அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம், தாவீது அரசனின் மகனான சாலமோனுக்கு கடவுள் தோன்றியதையும், அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்டதையும் விளக்குகின்றது. சாலமோன் நீடிய அரசாட்சியையோ, உலக செல்வங்களையோ, நீடிய ஆயுளையோ, தன் குடும்ப தேவைகளையோ முன்னிறுத்தாமல்மக்களை நல்லாட்சி செய்ய ஞானம் என்னும் வரத்தைக் கடவுளிடம் கேட்கிறார். நாமும் கடவுளிடம் நன்மை தீமையைப் பகுத்தறிய தேவையான ஞானத்தை கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இன்றைய இரண்டாம் வாசகத்தில் , புனித பவுல் கூறுகிறார், கடவுள் தாம் அழைத்தவர்களைத் தமக்கு ஏற்புடையவராக்கி அவருடைய மாட்சிமையில் பங்கு பெறச் செய்கிறார். கடவுள் தரும் இறையாட்சியை இழக்காமல் இருக்க ஞானம் தேவை. மேலும் நாம் மண்ணக நலன்களை வெறுக்காமல் அவற்றை ஞானத்துடன் சீர்தூக்கிப் பார்க்கவும் அழைக்கப்படுகின்றோம். எனவே இறை ஞானம் பெற்று இறையரசை நமதாக்கி கொள்ள அருள் வேண்டுவோம்.

கடவுளிடமிருந்து தீமை வரமுடியாது. சாவைக் கடவுள் உண்டாக்கவில்லை. வாழ்வோரின் அழிவில் அவர் மகிழ்வதில்லை. அப்படியானால் கடவுளின் படைப்பில் தீமை எவ்வாறு நுழைந்தது? இக் கேள்விக்கு 'வயலில்' தோன்றிய களைகள் உவமை மூலம் இன்றைய நற்செய்தியில் கிறிஸ்து பதிலளிக்கிறார். வயலில் நல்ல பயிர்கள் நடுவே களைகள் தோன்றுகின்றன. இக்களைகளை விதைத்தவன் பகைவன், அலகை. உலகம் முழுவதும் அவன் பிடியில்இருக்கிறது.

நம் சமூகத்தில் பல நேரங்களில் தீயவைகள் நல்லவையாக தோன்றுவதும், அந்த தீயவைகளை நல்லது என்று நியாயப்படுத்தி ஏற்றுக் கொள்வதும் இயல்பான ஒன்றாக மாறிவிட்டது. உலகின் நன்மைக்கான அறிவை விட தீமைக்கான ஆற்றல் அதிகம் உள்ளது. தூய பேதுரு தனது முதல் திருமுகத்தில் சொல்வது போல் அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ஜிக்கும் சிங்கம் போல் தேடித்திரிகிறது. அசையாத நம்பிக்கை கொண்டவர்களாய் அதனை எதிர்த்து நிற்க இன்றைய வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்துவின் இயல்பைக் கொண்டு கடுகுவிதைப்போல் நம்மை மட்டும் இன்றி, நம்மைச் சூழ்ந்துள்ள அனைவரையும் நம்முடைய நற்குணத்தால் நிரப்புவோம்.

**முதல் வாசக முன்னுரை**

களைகளை உடனடியாகக் களையக் கடவுளிடம் சக்தி இல்லையா என்ற கேள்விக்கு இன்றைய முதல் வாசகம் கூறுகிறது. கடவுள் மிகுந்த பொறுமையோடு மனிதர்களை ஆள்கிறார். பொறுமை உள்ள கடவுள் உடனடியாக தீயவர்களை அழிக்காமல் இறுதி நாள் வரை பயிர்களுடன் களைகளையும் வளர அனுமதிப்பார். அறுவடை நாளில் களைகளைப் பறித்துச் சுட்டெரிப்பார் என்கிறது இன்றைய முதல் வாசகம். ஆண்டவரின் தீர்ப்புக்கு உட்படாமல் மனமாற்றம் பெற்று அவரது தண்டனையிலிருந்து தப்பித்து மீட்பின் மக்களாக வாழ அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவி மடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

தீமையை எதிர்த்துப் போராட இன்றைய இரண்டாவது வாசகம் அழைப்பு விடுக்கின்றது. இப்போராட்டத்தில் தூய ஆவியார் நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாக நமக்காகப் பரிந்து பேசுகிறார் என்று திருத்தூதர் பவுல் கூறுகிறார். இவ்வுலகின் தலைவனாகிய அலகைக்குக் கிறிஸ்துவின் மேல் அதிகாரமில்லை என்கிறார் யோவான். எனவே கடவுள் நம் சார்பில் இருப்பதை உணர்ந்து தீய சக்திகளை எதிர்த்து தீமையின் மேல் வெற்றிகொள்ள தேவையான இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் , பொதுநிலையினர் அனைவரும் இவ்வுலகின் தலைவனாகிய அலகைக்கு எதிராக போராடி ஆண்டவரின் இறையரசை இவ்வுலகில் கட்டி எழுப்பிட தேவையான இறையருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, இவ்வுலகில் உள்ள அநீதிகள் தீமைகள் அனைத்திற்கும் எதிராக போராடவும், கிறிஸ்துவின் மதிப்பீடுகளாகிய





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலத்தின் 14 ஆம் ஞாயிறு(09.07.2023)**

செக் 9: 9-10 உரோ 8:11-13 மத் 11:25-30

**முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்தவர்களே, கிறிஸ்துவை பின்பற்றி நாமும் சாந்தம் உள்ளவராக வாழ இன்றைய அருள்வாக்கு வழிபாடு நம்மை அன்புடன் அழைக்கின்றது. பாவநிலையில் இருந்து நமது வாழ்வை கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பினால் கழுவி, நம்மைக் கடவுளின் சுவீகாரப் பிள்ளைகளாக மாற்றுகிறார் இயேசு. கிறிஸ்துவின் அன்பினால் அவரது இரக்கத்திற்கும் பரிவிற்கும் உரிய மக்களாக இறைவன் நம்மை மாற்றியுள்ளார்.

இயேசு, மக்களின் ஞானத்தையும், அறிவையும் குறைவாக மதிப்பிடவில்லை. மாறாக இதனால் வரும் செருக்கையும், வறட்டு கவுரவத்தையும் வெறுக்கிறார். ஞானிகள் என்று தங்களையே சொல்லிக் கொள்பவர்கள் கடவுளின் இரக்கத்திலிருந்து அந்நியப்பட்டிருக்கிறார்கள். கடவுள் தன்னை ஒரு கோட்பாட்டுக்குள் மட்டும் வெளிப்படுத்துபவர் அல்ல. மாறாக சாதாரண மக்களும் தன்னை அறியுமளவுக்கு உலக நடப்புகளிலும் வெளிப்படுத்துகிறார்.

நமது அனுதின வாழ்வில் தன்னை வெளிப்படுத்தும் இறைவனை கண்டு உணர்ந்திட, எளிமையிலும் தாழ்ச்சியிலும் நாம் வாழ வேண்டும். இயேசுவின் அன்பையும், அவரது தாழ்ச்சியையும் நமது கிறிஸ்துவ வாழ்வில் முன்னிறுத்தும்போது, அதை நமது வாழ்வில் கடைபிடிக்கும்போது உலகத்திலுள்ள எல்லா பிரச்சனைகளும் சுலபமாக முடிகின்றன. குழந்தை உள்ளத்துடன் இறுமாப்பின்றி இருக்கும்போதுதான் கிறிஸ்து நமது சுமைகளை எளிதாக்குவார். அவரது நுகம் அழுத்தாது, அவரது சுமை எளிது.

**முதல் வாசக முன்னுரை**

இஸ்ரயேல் மக்களை பலவகையான அரசர்கள் ஆண்டார்கள். ஆனால் அனைவருமே இஸ்ரயேல் மக்களை ஏதாவது ஒருவகையில் கொடுமைப்படுத்தினர். இந்நிலையில் தான் இறைவாக்கினர் இன்றைய முதல் வாசகத்தில் இம்மக்களுக்காக வரவிருக்கிற அரசனைப் பற்றி கூறுகிறார். வரவிருக்கிற இஸ்ரயேலின் அரசன் மற்ற அரசர்களைப் போல் அல்லாமல் மக்களோடு மக்களாக வாழ வருகிறார். அவரது ஆட்சிக்கு முடிவு இராது. அத்தகைய இறையாட்சி இஸ்ரயேல் மக்களுக்கு மட்டுமல்லாமல் அனைவரும் பங்குபெறக் கூடிய ஆட்சியாக இருக்கும் என்று கூறும் இறைவாக்கினரின் குரலுக்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இரண்டுவிதமான வாழ்வைப் பற்றி புனித பவுல் அடிகளார் கூறுகிறார். முதல் வகையான வாழ்வு பாவத்தால் ஆட்கொள்ளப்பட்டு மனிதனை முன்னிலைப்படுத்தி உலக நாட்டங்களில் வாழ்வது. இரண்டாவது வகையான வாழ்வு தூய ஆவியை மையப்படுத்தியது. இவர்கள் கிறிஸ்துவுக்குள் வாழ்பவர்கள், கிறிஸ்துவின் எண்ணங்களை தங்களது வாழ்வில் பிரதிபலிப்பவர்கள். இத்தகைய வாழ்வு கடவுளை நோக்கிச் செல்லக் கூடியது. கடவுளின் ஆவியின் துணையோடு அவரது சுவிகாரப் பிள்ளைகளாக வாழ இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருதந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் , பொதுநிலையினர் அனைவரும் சாந்தமும் மனதாழ்ச்சியும் நிறைந்தவர்களாக வாழந்து உமது இறையரசின் கருவிகளாக வாழ அருள் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா எம் நாட்டின் அரசியல், சமூக , சமய தலைவர்கள், சுயநலம் விடுத்து மக்களின் நலன்களை முன்னிலைப் படுத்தி அவர்களது நல்வாழ்விற்காக தங்களை அர்பணித்து வாழக்கூடிய மனமுதிர்ச்சியையும் இறை ஞானத்தையும் அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, உமது பிள்ளைகளாகிய நாங்கள் ஒவ்வொருவரும் உலக நாட்டங்களின் மீது எங்களது காலங்களை செலுத்தாமல் ஆவிக்குரிய வாழ்வை மேற்கொண்டு உமது சுவிகாரப் பிள்ளைகளாக வாழ தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் வருகின்ற துன்பங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள், நோய்கள், இன்னல்கள் அனைத்தையும் உமது பாடுகளோடு இணைத்து ஒப்புக் கொடுத்து நம்பிக்கையோடும் சமாதானத்தோடும் மனத்திடத்தோடும் வாழ்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 15 ம் ஞாயிறு (16.07.2023)**

**எசா 55:10-11 உரோ 8:18-23 மத் 13:1-23**

**முன்னுரை**

கடவுள் நமது மானிடம் செழித்தோங்க வேண்டும், வளம் பலகண்டு மகிழ்வு காண வேண்டும் என விரும்புகிறார். இதற்காக எந்த வழிகளில் எல்லாம் மனிதனை வளப்படுத்த முடியுமோ அந்த வழிகளில் எல்லாம் இறைவன் தன்னை முழுவதும் வெளிப்படுத்துகின்றார். கடவுள் தரும் இந்த பேரிரக்க முயற்சி பலன் பெறுகிறதா என்பதை சிந்தித்துப் பார்க்க இன்றைய வாசகங்கள் நம்மை அழைக்கின்றன.

மனிதன் இதை ஏற்கும்போதும் , உதறித் தள்ளும்போதும், கண்டு கொள்ளாத போதும் கடவுள் மனம் தளாந்துவிடுவதில்லை. மாறாக, அவர்மீண்டும் மீண்டும் மனித பலவீனத்தை உணர்ந்தவராய் வாரி வழங்கும் தனது கொடைத் தன்மையை வெளிப்படுத்திக கொண்டேயிருக்கிறார். கடவுளின் இந்த தாராள உள்ளத்தை நாம் எந்த வகையில் பயன்படுத்துகிறோம் என்று சிந்திக்க இன்றைய இறைவாக்கு வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

யார் நம்மைக் காப்பாற்றுவார்? மனிதர் அல்ல, கடவுளே! மனிதர் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே மேல்





என்கிறார் சங்கீத ஆசிரியர். கடவுளை நம்புவோம், அவருடைய வார்த்தைக்குச் செவிமடுப்போம், அதை நம் வாழ்வில் கடைப்பிடிப்போம். அதன் வழியாக கிறிஸ்துவின் சீடர்களாக வாழ்வை தொடர்வோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் கடவுளின் பேரிரக்கத்தை மிக அற்புதமாக வெளிப்படுத்துகின்றார். கடவுளின் முழுமுதல் வெளிப்பாடாகிய இறைவார்த்தையை அவர் மானிட வாழ்வு முழுவதும் வளம் பெற கொடுப்பதை காண முடிகிறது. கடவுளுடைய வார்த்தையை மழைக்கு ஒப்பிடப்படுகிறது. மழை பூமியை நனைத்து உண்பவருக்கு உணவும், விதைப்பவருக்கு விதையும் கொடுக்கும். அவ்வாறே கடவுளுடைய வார்த்தையும் கடவுள் விரும்பும் பலனை விளைவிக்கும் என்ற நம்பிக்கையில் செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இம்மைக் காலத்தில் நாம் படும் துன்பங்கள் நம்மிடம் வெளிப்படப்போகின்ற மகிமையோடு ஒப்பிடவும் தகுதியற்றவை என்று எண்ணுகிறேன் என்கிறார் புனித பவுல் அடிகளார். கடவுளுடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவர்கள் துன்புறுவார்கள். பேறுகால வேதனை அடைவர். ஆனால் இறுதியில் முழுமையான விடுதலைபெறுவர் என்று உரைக்கும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், மற்றும் பொது நிலையினர் அனைவரும் உமது வார்த்தையை அனுதினமும் வாசித்து, வாசித்த வார்த்தையை தியானித்து, தியானித்த வார்த்தையை வாழ்வாக்கி, மிகுந்த பலன் தரும் நிலங்களாக வாழ்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வில் எல்லா சூழ்நிலைகளிலும் உமது வார்த்தையை வாசித்து, அதனை தியானித்து உமது ஆறுதலையும், உமது விடுதலையையும் உமது உடனிருப்பையும் நிறைவாய் பெற்று வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, உமது வார்த்தைகளை வாழ்வாக்கிட முயற்சிக்கின்ற போது எங்களது வாழ்வில் ஏற்படுகின்ற இன்னல்களையும், துன்பங்களையும் கண்டு துவண்டுவிடாமல் பொறுமையுடன் வாழ்ந்து உமது மாட்சிமையில் நாங்களும் பங்கு பெற அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா எங்களது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் இறைவார்த்தையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவ்வார்த்தையை வாசித்து அதை பிறருக்கு அறிவித்து அதன் வழியாக உமது இறையரசை இவ்வுலகில் கட்டி எழுப்பிட தேவையான இறையருளை பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 16 ம் ஞாயிறு(23.07.2023)**

**சாஞா 12:13,16-19 உரோ 8:26-27 மத் 13:24-30**

**முன்னுரை**

கடவுள் இவ்வுலகை நன்றாக , மிகவும் நன்றாகப் படைத்தார். கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன என்கின்றது தொடக்க நூல். நன்மையே உருவான